KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

மலர்:- 32, 12 December 2025 இதழ்:- 42

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# இலங்கைத் தீவுக்குள் புயல் நிவாரணத்துடன் மெல்ல நுழையும் அமெரிக்கா விமானங்கள்!



இலங்கைத்தீவுக்குள் மெல்ல நுழையும் இலங்கை அரசியல் மேடையில் பெரும்பாலான நாடுகள் தம் சொந்த நலன்களை முன்னிறுத்தி நகரும் நிலையில் மிகச் சுருக்கமாகவும் மிகச் சிக்கலாகவும் செயல்படும் சக்தி அமெரிக்கா ஆகும். அது ஒரு காலத்தில் வெளிப்படையான தூதரக நடை முறைகள் வழியாக மட்டுமே ஈடுபட்டிருந்தாலும், அண்மைக் காலங்களில் மெல்ல நுழையும் திறமையான நுட்பம் மூலம் இலங்கையின் (14ம் பக்கம் பார்க்க)

## டித்வா புயல் ஜனாதிபதி அநுராவைப் பலப்படுத்தியுள்ளதா?

ரணில் விக்கிரமசிங்கவால் எல்போர்ட் அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு டித்வா புயல் ஒரு சோதனையாக வந்திருக்கிறது. கடந்த 14 மாதங்களாக தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த எதிர்க்கட்சிகள் நுகேகொடவில் (13ம்பக்கம் பார்க்க)

# இரு வேறு காலங்களில் இரு உணவுப் பொட்டலங்கள்! மனிதாபிமானமா? அரசியலா?

இலங்கை வடக்கின் வானில் வீசப்பட்ட இரண்டு வகை 'உணவுப் பொட்டலங்கள்'. ஒன்று 1987 ஆம் ஆண்டில் பசியால் தவித்த தமிழ் மக்களை உதவி செய்வதற்காக இந்தியா மேற்கொண்ட ஒப்பரேஷன் 'பூமாலை', ஆனால் அதன் பின்னால் மறைந்திருந்தது கடுமையான அரசியல் உத்தி (12ம் பக்கம் பார்க்க)






# ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட அனுபவங்கள்!

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# டித்வா புயலால் அதிர்ந்த இலங்கைக்கு ஊழல் ஒழிப்பு - போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளால் சர்வதேச உதவிகள் பெருகுகின்றன!



டித்வா புயல் நாட்டின் வட கிழக்கு மற்றும் தென்பகுதிகளில் பரவலான சேதங்களை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து அமெரிக்கா உட்பட பல உலக நாடுகள் இலங்கைக்கு அவசர மனிதாபிமான உதவிகளை விரைவாக அனுப்பி வருகின்றன. உணவு, மருந்து, குடிநீர், தற்காலிக தங்குமிட வசதிகள் மற்றும் அவசர மீட்புப் பணிகளுக்கான உபகரணங்கள் ஆகியவை தொடர்ச்சியாக நாட்டை வந்தடைந்து கொண்டிருக்கின்றன.

அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிப்பதாவது, சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்கும் இத்தகைய பரவலான உதவிகளுக்குப் பின்னணி, இலங்கையின் தற்போதைய ஆட்சி மேற்கொண்டு வரும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளும், போதைப்பொருள் தடுப்பு முயற்சிகளும் முக்கிய காரணங்களாக உள்ளன. ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு கடந்த மாதங்களில் நாடு முழுவதும் கடுமையான போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்ததோடு அரசின் பொது நிதி மேலாண்மையில் தெளிவுத்தன்மையும் பொறுப்புத்தன்மையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க அரசின் வட்டாரங்கள் கூறுவதாவது, இலங்கை தற்போது எடுத்துள்ள நேர்மையான மறுசீரமைப்பு முயற்சிகள், குறிப்பாக ஊழல் குறைப்பும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தலும், எங்கள் ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் முக்கிய காரணிகளாகும் என தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளும் தங்களின் உதவி தொகுப்புகளை அறிவித்துள்ளன. அவசர நிவாரணத்துடன், நீண்ட கால மீள்கட்டமைப்பு திட்டங்களுக்கும் நிதி உதவி வழங்கத் தயாராக இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நிபுணர்கள் தெரிவிப்பதாவது, இலங்கை அரசு ஊழலற்ற நிர்வாகமும் பாதுகாப்பு சார்ந்த கடுமையான போதை ஒழிப்பு நடவடிக்கைகளும் தொடர்ந்தால், எதிர் காலத்தில் மேம்பட்ட வளர்ச்சி உதவிகள் நாட்டிற்குள் பெருகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

டித்வா புயலின் பேரழிவை சமாளிக்கும் இச்சூழலில், சர்வதேச சமூகத்தின் இத்தகைய ஆதரவு, இலங்கைக்கு மறுசீரமைப்பின் பாதையில் வலுவான ஆதாரமாக இருக்கும் என நம்பப்படுகிறது.

இது இவ்வாறிருக்க அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உடனடி உதவி நிதியத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள 4.5 மில்லியன் டொலர் நிதியுதவி 08 டிசம்பர் 2025 திங்கட்கிழமை ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சேவினால் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் இலங்கை மிகமோசமான பேரழிவுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையுடனான உடன்நிற்பை வெளிப்படுத்தி வரும் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்கள், இலங்கைக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கி வருகின்றன.


இவ்வாறானதொரு பின்னணியில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சேவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன் போது பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்குவதிலும், நாட்டை மீளக்கட்டியெழுப்புவதிலும் அவசியமான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக ஐ.நா வதிவிடப்பிரதிநிதி உறுதியளித்தார்.

அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உடனடி உதவி நிதியத்தின் ஊடாக 4.5 மில்லியன் டொலர் நிதியை உடனடியாக வழங்குவதற்கு ஐ.நா சபை தீர்மானித்திருப்பதாகக் கூறிய வதிவிடப் பிரதிநிதி அந்நிதி உதவிக்கான காசோலையை அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

அதேபோன்று தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்கள் ஊடாக இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளில் உணவுப் பாதுகாப்பு, முறையான வீடு, தூய குடிநீர், கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், இதுகுறித்து விரிவான மதிப்பாய்வு ஒன்றை மேற்கொள்வதற்காக மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் இருந்து 5 அதிகாரிகள் அடங்கிய குழு நாட்டை வந்தடைந்திருப்பதாகவும் மார்க் அன்ட்ரூ பிரான்சே இச்சந்திப்பில் எடுத்துரைத்தார்.

கந்தன் துணை

வணக்கம் நமது தமிழ் சொந்தங்கள் அனைவருக்கும் நாங்கள் இலங்கையில் உள்ள நாவலர் பரம்பரை வழியில் வந்த தமிழர்களின் பரம்பரை ஜோதிடர் திரு.ஆறுமுக நாவலர் தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக கனடாவிற்கு வருகை தந்துள்ளார். நீங்கள் இதுவரை எத்தனையோ ஜோதிடர்களை சந்தித்து பலன் பெறாத நீங்கள் ஒருமுறை என்னை சந்தித்து உங்கள் ஜோதிட பிரச்சனைகளுக்கு பலன் பெற்று செல்லுங்கள்.




ஸ்ரீ கந்தன் ஜோதிட நிலையம்
ஜோதிடர். ஆறுமுக நாவலர்



1.ஜாதக குறிப்பு பலன்கள் 2.கைரேகை பலன்கள் 3.முக லக்ன பலன்கள் 4.சோழிப் பலன்கள் துல்லியமாக கணித்து கூறப்படும்.

1.உடல்நலம், 2.கல்வி, 3.வியாபாரம், 4.திருமணத்தடை, 5.காதல் பிரச்சனை, 6.குழந்தை பாக்கியம், 7.வாஸ்து சாஸ்திரம், 8.தாம்பத்திய கோளாறு, 9.வழக்கு விவகாரம், 10.வெளிநாட்டு பயணங்கள், 11.செய்வினை, தீயசக்தி தீர்வுகள், 12.கணவன், மனைவி ஒற்றுமை பிரச்சனை, 13.சொத்து பிரச்சனை, 14.செவ்வாய், நாகதோஷ பரிகாரம், 15.எதிரிகளின் பிரச்சனை, 16.குடும்பத்தில் திடீர் இழப்பு

ஆகிய அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் சிறந்த முறையில் தீர்வு கொடுக்கப்படும்

தொடர்புக்கு : 437 - 833 - 6651

OUR BRANCHES: TORONTO, SCARBOROUGH, MISSISSAUGA, BRAMPTON

உடனே அப்பாய்மெண்ட் எடுத்துக் கொள்ளுங்கள்

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களிடமிருந்து அவசியமும் அவசரமுமான நிதி திரட்டல்!



என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டு களாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வருபவர்கள் நீங்கள். அதுமட்டுமல்ல அவர்களது கல்வி - பாதுகாப்பு - உடை - சுகாதாரம் - பராமரிப்பு உட்பட அனைத்துச் செலவு களையும் வருடாந்த இன்னிசை விழாவும் இராப்போசன விருந்தும் நிகழ்வு மூலம் உதவி வருபவர்களும் நீங்களே.

ஆனால் அண்மையில் இலங்கையில் ஏற்பட்டு இன்று வரை வெள்ளப் பாதிப்பால் சேதமடைந்த முல்லைத்தீவு முள்ளிய வளையில் அமைந்துள்ள பாரதி இல்லம் மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள செஞ்சோலை அன்பு இல்லங்கள் இந்த இயற்கை அனர்த்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு பிராந்தி யத்தில் உள்ள முள்ளியவளையில் அமைந்துள்ள பாரதி இல்லம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று இல்லங்களும் பல ஆண்டுகளாக சங்கடங் களையும் சவால்களையும் கடந்து பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு பாதுகாப்பான தங்கும் சூழல், உணவு, கல்வி, ஆலோசனை மற்றும் எதிர்கால நம்பிக்கை வழங்கி வருகின்றன. ஆனால் அண்மையில் இலங்கை முழுவதும் ஏற்பட்ட கொடுமையான மழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நீர்மட்ட உயர்வு காரணமாக இல்லங்களின் கட்டிட வசதி கள், குடிநீர் அமைப்புகள், சமையல் அறைகள், படுக்கை யறைகள் குழந்தைகளின் உடமைகள் உள்ளிட்ட பல அத்தியாவசிய பகுதிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன. குழந்தைகளின் தினசரி வாழ்வாதாரத்துக்கே நேரடியான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அத்தியாவசியமானதும் அவசரமானதுமான சூழ்நிலையை முன்னிட்டு உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கனடா தமிழ்ச்சமூகத்திடம் அவசர நிதி உதவிக்கான திரட்டல் முயற்சியை இன்று 05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமை முதல் ஒரு மாதத்திற்கு ஆரம்பித்து ள்ளது. (05 ஜனவரி 2026 வரை)

இல்லங்களின் உடனடி பழுது பார்ப்பு, குழந்தைகளின் உணவு, உடை, படுக்கை உள்ளிட்ட அடிப்படை வசதி கள் மீளமைத்தல் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை மேம்பாடுகள் பாதிக்கப்பட்ட கற்றல் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மாற்றுதல் என்பன உடனடித் தேவையாக வுள்ளது.

நமது குழந்தைகள் பாதுகாப்பாகவும் மரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய கனடா தமிழர் சமூகத்தின் இரக்க மிக்க பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. ஒவ் வொரு நன்கொடையும் ஒரு குழந்தையின் எதிர்காலத் திற்கு புதிய ஒளியையும் நம்பிக்கையையும் வழங்கும் என்பதை உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை வலியுறு த்துகிறது.

ஈழநாடு பரமேஸ் 416 841 9600 என்ற எமது தொலைபேசி யில் தொடர்பு கொண்டு நிதி உதவி வழங்க விரும்பும் அன்பர்கள் தயவு செய்து பெயர், தொலைபேசி இலக்கங் களைத் தவறாது பதிவு செய்யவும்.

வங்கியில் நேரடியாக பணம் செலுத்த விரும்புபவர்கள் **T.D.BANK Eelanadu Anpuillam A/C 3026 - 5013835** என்ற வங்கிக் கணக்கில் செலுத்தவும். முக்கியமாக உங்களது பெயர் விபரங்களை எமக்கு அறியத் தரவும்.

**E-Transfer**செய்ய விரும்பும் அன்பர்கள் **Eelanadu 1993@gmail.com** என்ற மின்னஞ்சலில் அனுப்பலாம். நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலர்களும் மூன்று இல்லக் குழந்தைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படும்.

அன்பர்களே! உங்களது பெயர் விபரங்கள் அனுப்பிய பணத் தொகை சரியாக உள்ளதா என்பதை எம்முடன் தொடர்பு கொண்டு அல்லது முகநூல் மூலமாகவோ - **Eelanadu.ca** மின்னிதழ் மூலமும் உறுதிப்படுத்திக் கொள் ளுங்கள்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கனடியத் தமிழ்ச மூகத்தில் 32 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருப்ப துடன் 3 இல்லங்களின் வாழும் குழந்தைகளின் நலனுக்காக 14 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக கனடியத் தமிழ் சமூகத் தின் ஆதரவோடு அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். என்றும் உங்கள்அன்புக்குரிய

T.K.பரமேஸ்வரன் - ஆசிரியர் ஈழநாடு 416 841 9600

அவசர நிதி உதவி வழங்கியோர் விபரங்கள்

திரு சாந்தா பஞ்சலிங்கம் 1000.00

ஈழநாடு பத்திரிகை 500.00

திருமதி சாருமதி மனோகாந்தன் 250.00

திரு.திருச்செல்வன் சிவசாமி 100.00

திரு விசு கணபதிப்பிள்ளை (உதவும் பொற்கரங்கள் அமைப்பு கனடா) 250.00

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடா 1000.00

திருமதி வதனி ஹரிஸ் 500.00

திரு ம.தயாகுணன் 100.00

திரு ஜெயபாலசிங்கம் நாகமணி (டென்மார்க்) 500.00

திருமதி ரஜனி நித்தி (கனடா) 500.00

செல்வி வைதினி விஜயகுமார் 100.00

திரு குலசேகரம்பிள்ளை அநுராகரன் 200.00

(தொடரும்)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இலங்கையைச் சென்றடையும் தாராளமான நிவாரண உதவிகள்! இந்தியா - அமெரிக்காவைத் தொடர்ந்து சீனா - ரஷ்யா விமானங்கள் நிவாரணப் பொருட்களுடன் கொழும்பைச் சென்றடைந்தது!

பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த 84 தொன் மனிதாபிமான உதவி நிவாரணப்பொருட்களை ஏற்றிய சீன விமானம் 08 டிசம்பர் 2025 திங்கட்கிழமை இலங்கையைச் சென்றடைந்தது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வணிக நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவி முயற்சிகளுக்குப் பங்களிப்புச்செய்யும் வகையில் சீனா அரசாங்கம் ஏற்கனவே ஒரு மில்லியன் டொலர் நிதியுதவியையும், 10 மில்லியன் ஆர்.எம்.பி பெறுமதியான நிவாரணப் பொருட்களையும் வழங்கியுள்ளது.

அதுமாத்திரமன்றி சீன செஞ்சிலுவை சங்கத்தினால் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு 100,000 டொலர் உடனடி நிதியுதவியும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.



இவ்வாறானதொரு பின்னணியில் மேலும் சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த 84 தொன்களுக்கு மேற்பட்ட மனிதாபிமான உதவிப் பொருட்களுடன் ஷங்காய் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட போயிங் 747 கார்கோ விமானம் 08 டிசம்பர் 2025. காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தது.

மேற்படி மனிதாபிமான நிவாரணப் பொருட்களில் வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவக் கூடிய உயிர்காக்கும் ஜக்கெட்கள், கூடாரங்கள், போர்வைகள், மெத்தை விரிப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன.

நாட்டை சென்றடைந்த இவ்விமானத்தை வரவேற்பதற்கு துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் அநுர கருணாதிலக, பாது காப்புப் பிரதியமைச்சர் அருண ஜயசேகர மற்றும் இலங்கைக்கான



சீனத்தூதுவர் சி சென்ஹொங் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் சூழ்நிலைக்கு ஆதரவாக ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் அடங்கிய விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்தது.

10 டிசம்பர் 2025 புதன்கிழமை ரஷ்ய கூட்டமைப்பினால் 35 மெட்ரிக் தொன் எடையுள்ள நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மொபைல் பவர் ஸ்டேஷன் (Mobile Power Station), காய்கறி எண்ணெய், சீனி, அரிசி மற்றும் கூடாரங்கள் (Tents) என்பன விமானத்தில் கொண்டு வரப்பட்டிருந்தன.

இவற்றை கொண்டுவந்த மிகப்பெரிய ரஷ்ய சரக்கு விமானமான இலியுஷின் ஐடு-76 விமானம் பிற்பகல் 1.10 மணிக்கு (17ம் பக்கம் பார்க்க)


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# மட்டக்களப்பு அரசியல் வரலாற்றில் அணையாத ஒளி செல்லின் செல்வர் இராஜதுரை அணைந்தார்!

மட்டக்களப்பின் அரசியல் வரலாற்றில் அணையாத ஒளியாக விளங்கிய செல்லின்செல்வர் செல்லையா இராஜதுரை அவர்கள் 98வது வயதில் தமிழகத்தில் இயற்கை எய்தினார்!

ஒரு காலத்தை உருவாக்கிய தலைவர். ஒரு தலைமுறையை வடிவமைத்த முன்னோடி. மட்டக்களப்பின் அறுபதாண்டு கால அரசியல் பரிணாமத்தில் அழிக்க முடியாத தடம் பதித்த சில மாபெரும் ஆளுமைகள் உள்ளனர். அதில் முன்னணியில் திகழ்ந்தவர் செல்லின் செல்வர் செல்லையா இராஜதுரை.

அவர் ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல. ஒரு இலக்கியவாதி. ஒரு சிறந்த மேடைப்பேச்சாளர். தன்னுடைய பேச்சு வன்மையால் மக்களைக் கவர்ந்த தமிழ்ப் பேச்சாளர். தந்தை செல்வாவின் பாசத்திற்குரிய மகனாக இருந்தவர். மட்டக்களப்பு மக்களின் இதயங்களில் முடிசூடா மன்னன் அவர்.

பொது மக்கள் அன்பையும் பாசத்தையும் சம்பாதிப்பவர்கள் சிலரே. அவர் அந்தச் சிறப்பு பெற்றவர். கட்சிக் கொடி மரங்களையும், தேர்தல் மேடைகளையும் தாண்டி மக்களின் உள்ளங்களில் பதிந்திருந்த மரியாதை மட்டக்களப்பின் ஒவ்வொரு தெருக்களிலும் மண்ணின் மணத்திலும் இன்றும் அவரது பெயரைச் சுவடெனக் காத்து நிற்கிறது.

தமிழரசுக்கட்சியின் உயிர் நாடியகத் திகழ்ந்தவர். மட்டு நகரில் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சியில் அவர் வகித்த பங்கு மகத்தானது ஒரு அரசியல் பொறுப்பு அல்ல. ஒரு ஆன்மீகப் பண்பு. கொள்கைகள், தமிழின அரசியல் உரிமைகள்– மொழி—கலாசாரம்—அடையாளப் பாதுகாப்பு ஆகியவற்றை மக்களுக்குள் மிகத் தெளிவாகவும் பண்பாகவும் விளக்கக்கூடிய சிறந்த தார்க்கிக பேச்சாளராக அவர் மதிக்கப்பட்டார்.


அவரது உரைகளில் பகுத்தறிவின் நுட்பமும், இலக்கியத்தின் இனிமையும், தமிழின் தூய்மையும் கலந்து விளங்கியவை. அவர் மேடையேறினால் மக்கள் கேட்டுக் கொள்ளாமல் கூட கேட்கத் தூண்டும் அளவு அவரது வார்த்தைகள் உயிர் பெற்றுப் பேசின. தொடர்ச்சியாக பல ஆண்டுகள் மட்டக்களப்பு மக்களின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அவர் ஆற்றிய சேவைகள் அரசியல் மேடையையும் தாண்டி இருந்தன.

கிழக்குத் தமிழரின் குரலை உயர்த்தியவர். மலேசியத் தமிழர்களுடனும், தென்னிந்திய தாயகத் தமிழர்களுடனும் நாகரிகத் தலையாய உறவுகளைப் பேணியும் மேம்படுத்தியும் அவர் மதிப்புடன் பணி புரிந்தார். மக்களுள் வாழ்ந்த மனிதநேயம் அவர் அரசியல்வாதி என்பதற்கு அப்பால் பண்பான மனிதர். மகத்தான தமிழ்த்தேசியவாதி.

அரசியலில் உறுதி சொல்லில் சீர்மை, செயலில் நேர்மை இவை மூன்றும் அவரை யாராலும் அசைக்க முடியாததலைவராக உருவாக்கின.

மட்டக்களப்பின் அரசியல் திசையை மாற்றியவர் தமிழரசுக்கட்சியின் கிழக்குப் பெருக்கத்தைக் கட்டியவர் தமிழ்ச்சொல்லின் இனிமையை மேடையில் பேசியே மக்களின் நம்பிக்கையில் வாழ்ந்த தலைவர் நேர்மையில் தளராத அரசியல் ஆளுமை இலக்கியப் பேச்சின் மானமிகு கலைஞர்

இந்தப் பண்புகள் தலைமுறைகள் கடந்தும் அரசியல் வரலாற்றில் அவரது பெயர் ஒளிர்கின்ற நட்சத்திரமே.



செல்லின்செல்வர் செல்லையா இராஜதுரை அவர்கள் ஒரு காலத்தைத் தாண்டி நிற்கும் மனிதர். அரசியல் மேடையின் நடிகர் அல்ல. தமிழ்மக்கள் மனங்களின் நாயகர் அவர். மட்டக்களப்பின் பொற்கால நினைவுகளில் அவரது பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. அவரை மறக்கவோ மறைக்கவோ வரலாற்றில் இடமில்லை.

1970களில் அண்ணன் இராஜதுரை அவர்களை முதன் முதலாக யாழ்ப்பாணத்து தமிழரசுக்கட்சி மேடைகளிலேயே பார்த்தவன் நான். தமிழரசுக்கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் இறுதிப் பேச்சாளர் அவர் தான். அவர் வருகைக்காக – அழகு தமிழ் பேச்சுக்காக மக்கள் காத்திருப்பார்கள்.

இதோ சொல்லின் செல்வர் அண்ணன் இராஜதுரை அவர்களது கார் வந்து விட்டது. மேடையை நோக்கி வந்து கொண்டிருக்கின்றார் என்ற அறிவிப்புக்கள் வந்து கொண்டிருக்க மக்கள் கரகோஷம் செய்து ஆர்ப்பாரிப்பார்கள்.

மேடையில் ஏறியவுடன் அண்ணன் இராஜதுரை பேசத் தொடங்குவார். மட்டக்களப்பு மண்ணில் ஒரு சில இனப்பகைவர்கள் – இன ஒற்றுமையைக் குலைப்பவர்கள் மட்டகளப்பான் – யாழ்ப்பாணத்தான் என்ற பிரதேசவாதத்தை கிளப்பி அரசியலில் குளிர்காய நினைப்பவர்களை மட்டக்களப்பின் அந்த ஆலமரத்தடியில் ஆழக்குழி தோண்டி நீளப் புதைத்து விட்டு வருவதால் கால தாமதமாகி விட்டது என்று தனது உரையை ஆரம்பிப்பார். மக்கள் அவரது பேச்சில் அப்படியே கட்டுண்டு போவார்கள்.

அப்படிப்பட்ட ஓர் மகத்தான தலைவராக விளங்கிய அண்ணர் இராஜதுரை அவர்களது அரசியல் வாழ்க்கையிலும் அரசியல் சூறாவளி வீசியது தமிழ்மக்கள் செய்த துர்திஷ்டமே. எதுவாக இருந்தாலும் மட்டு நகர் மக்களின் இதய சிம்மாசனத்தில் காலத்தால் அழியாது வீற்றிருந்தவர் அவர்.

பிரதேசவாதத்தை வேரறுத்த ஓர் பெருமகன் இன்று தன் மூச்சை நிறுத்திக் கொண்டு விட்டார். காலத்தால் மறக்க முடியாத அண்ணர் செல்லின்செல்வர் இராஜதுரை அவர்களுக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் எனது சார்பிலும் நெஞ்சார்ந்த அஞ்சலிகள்!

– T.K..பரமேஸ்வரன் – ஆசிரியர் ஈழநாடு

# அம்பிட்டிய தேரரை ஏன் கைது செய்யவில்லை? நீதிமன்றம் பிறப்பித்த அதிரடி உத்தரவு!



அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த உத்தரவை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் 08 டிசம்பர் 2025 பிறப்பித்துள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 15 திகதிக்கு முன்னர் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் இது வரை ஏன் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தவில்லை என்பதை சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் விளக்கி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 2023–10–23 திகதி ஊடகங்களுக்கு சுமணரட்ன தேரர் வழங்கிய செவியின் போது வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும் என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து இந்த தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக 2023–10–27 ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை காவல் நிலையத்தில் சட்டத்தரணி தனுக்க ரனஞ்சக என்பவர் முறைப்பாடு செய்துள்ளார். (17ம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர் மக்களின் உதவி?

அரசாங்கம் புலம்பெயர் மக்களிடம் உதவிகளை கோரியிருக்கின்றது. நாடு பாதிப்பை எதிர் கொண்டிருக்கும் இத்தருணத்தில் புலம்பெயர்ந்த மக்கள் தாராளமாக உதவிகளை வழங்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார்.

பொதுவாக புலம்பெயர் சமூகம் என்று குறிப்பிடும்போது பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலங்கையர்களை குறித்தாலும், அடிப்படையில் இலங்கையின் புலம்பெயர் சமூகம் என்றால் அது ஈழத் தமிழர்கள் தான்.

ஈழத்தமிழர்களை விடுத்து புலம்பெயர் சமூகம் என்று ஒன்றை அடையாளப்படுத்த முடியாது. ஆனால் ஐரோப்பாவில் சொற்ப அளவிலும் ஆனால் ஐரோப்பாவிற்கு வெளியிலும் ஏராளமான சிங்கள மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக உதவக் கூடும். அரசாங்கத்தின் கோரிக்கை ஒன்றின் அடிப்படையில் மக்கள் திரண்டு நிதியளிக்கக் கூடிய நிலையில்லை.

ஏனெனில் தமிழ் கட்சிகள் கூறினால் கூட தமிழ் மக்கள் திரண்டு உதவியளிப்பார்களா என்னும் நிலைமை காணப்படும் போது, அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக பெருமளவான வர்கள் உதவியளிக்கக் கூடிய நிலையில்லை.

ஆனால் புலம்பெயர் சூழலிருந்து தன்னிச்சையாக பலரும் தங்களுடைய இலங்கைத் தொடர்புகளின் வழியாக உதவி வருவதாகவே தெரிகின்றது. அதே போன்று தமிழ் அரசியல் கட்சிகள் தங்களுடைய தொடர்புகளின் ஊடாக உதவி வருகின்றனர். ஆனால் இவ்வாறான உதவிகள் வழமை போல் முறையான ஒழுங்கமைப்பின் கீழ் இடம்பெற வில்லை. கிடைக்கும் தகவல்களின் படி புலம்பெயர் நாடுகளில் பலர் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றனர் ஆனால் அவ்வாறு சேகரிக்கப் படும் நிதி யாரிடம் சேர்க்கப்படுகின்றது?

அவ்வாறா உதவிகள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் வழங்கப்படுகின்றதா – எங்கு என்ன உதவி தேவை என்பது தொடர்பில் அனைத்து தகவல்களும் ஓரிடத்தில் இருக்கின்றனவா? பதில் வழமைபோல் இல்லை – உண்மையில் வடக்கு கிழக்கு முழுவதும் ஓரிடத்தில் இல்லா விட்டாலும் கூட ஒவ்வொரு மாவட்டங்கள் தழுவிய சேத விவரங்களும் ஓரிடத்தில் இருக்கவேண்டும். அப்போது தான் உதவிகளுக்கான செயற்பாடுகள் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெறும்.

எவருக்கு தேவையுள்ளது – எங்கு மேலதிகமாக உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பவற்றை அறிந்து அதற்கேற்ப செயற்பட முடியும். ஆனால் இங்கு என்ன நடைபெறுகின்றது?

யுத்தத்தின் பின்னர் பல்வேறு புலம்பெயர் அமைப்புக்களும் தனிநபர்களும் வடக்கு–கிழக்கில் முக்கியமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல திட்டங்களை செய்திருப்பதாக கூறி வருகின்றனர். அவர்கள் கூறுவதைப் பார்த்தால் பல மில்லியன் டொலர்கள் உதவி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் என்ன விளைவுகள் ஏற்பட்டது என்றால் ஒன்றுமில்லை.

இப்போதும் சொந்தக் காலில் நிற்கக் கூடிய சமூகமாக தமிழ் சமூகம் வெள்ளம் என்றவுடன் உடனடியாக புலம்பெயர் உதவிகளைத் தான் எதிர் பார்க்கின்றனர். அவர்களிடம் எந்தவொரு சுய கட்டமைப்புக்களும் இல்லை. இதற்கு என்ன காரணம்? திட்மிடப்பட்ட வகையில் தூரநோக்கோடு நிதிகள் வழங்கப்படவில்லை. புலம்பெயர் சூழலிலும் சரி, தாயகத்திலும் சரி முறையான, ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்புக்கள் இல்லை.

உண்மையில் அரசாங்கம் நியமித்தது போன்று, தமிழ் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து, ஒரு மீட்புப் பணிக் குழுவொன்றை நியமித்திருக்க வேண்டும். அதன் கீழ் அனைத்து, உடனடி மற்றும் நீண்ட கால மீட்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு நடப்பதோ, தடியெடுத்தவர் எல்லாம் தண்டர் காரர் என்பது போல், அனைவருடைய கைகளிலும் உலர் உணவுப் பொதிகளும், அருகே புகைப்படம் எடுப்பதற்கான ஆட்களும். இன்னும் சில தினங்களில் இவர்களுடைய சத்தம் ஓய்ந்து விடும். இனி அடுத்த அனர்த்தம் ஒன்று வந்தவுடன் மீண்டும் நிதி சேகரப்பு படலம் ஆரம்பிக்கும்.

# மழலயகத் தமிழர்களை வடக்கில் வந்து குடியேறுமாறு ஆறு.திருமுருகன் அழைப்பு

மலையக தமிழ் மக்களை இனியும் ஆபத்தான மலை விளிம்புகளில் இருக்காமல் வடக்கிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார் சிவபூ மி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்



நல்லைநகர் ஆறுமுகநாவலரின் குரு பூஜை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றிய ஆறு திருமுருகன் அவர்கள் மலையக தமிழ் மக்களிடம் நாங்கள் நிலம் தருகிறோம். நீங்கள் வடக்கில் வந்து குடியேறுங்கள், வடக்கில் எவ்வளோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது. வடக்கில் எவ்வளவோ நிலம் இருக்கு என்று அவர்களை நாம் கூப்பிட வேண்டும் இதுவே மனித நேயம், இதுவே தர்மமாகும்.

மலையகத்திலிருந்து தமிழ் மக்கள் யாராவது வடக்கில் குடியேற வந்தால், எல்லா கோயில் காணிகளிலும், எல்லா சிதம்பரத்து காணிகளிலும், எல்லா தர்ம காணிகளிலும் அவர்களை குடியேற்றி அவர்களை காப்பாற்ற வேண்டும். அதற்கு எங்களை நாம் தயாராக்க வேண்டும். இதற்கு எம்மை போன்றவர்கள் பூரண ஒத்துழைப்பு கொடுக்க தயாராக இருக்கின்றோம். அவர்கள் இங்கு வந்தால் விவசாயத்தில் செழிப்பு வரும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை டித்வா புயலினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்குவதற்காக செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் 500 படுக்கை விரிப்புகளினை 01 நவம்பர் 2025 முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரனிடம் மாவட்ட செயலகத்தில் வைத்து கையளித்தார். அதே போன்று மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மலையகம் என பாதிக்கப் பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் சிவபூமி அறக்கட்டளை மூலமாகப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தது.

# இலங்கை அரசியலில் விமுக்தி?

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்க அரசியலில் நுழையும் சாத்தியக் கூறுகள் குறித்த தகவல் வெளி வர ஆரம்பித்துள்ளது.ஆனால் இந்த அறிவித்தல் சந்திரிகா குமாரதுங்க தரப்பில் இருந்து வெளி வந்தது அல்ல முன்னாள் ஜனாதிபதி அனர்த்த நிவாரண நிதியத்திற்கு 25 கோடி ரூபாய்களை அன்பளிப்புச் செய்துள்ள தகவலை அடுத்தே இந்தக் கதையும் களத்துக்கு வந்துள்ளது

சந்திரிகா குமாரதுங்க இந்தப் பணத்தை நிதியத்துக்கு அன்பளிப்பு செய்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு பிரபல அரசியல் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம் நல்ல தலைமை அரசியலுக்கு வர எந்தவித தடையும் இல்லை என்பது அரசியல் இயல்பான நிலையாகும்.

# இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்காக 35 மில்லியன் டொலர்கள் திரட்ட ஐ.நா.முயற்சி


இலங்கையின் மீட்பு முயற்சிகளை ஆதரிப்பதற்காக அடுத்த நான்கு மாதங்களில் 35 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்ட ஐக்கிய நாடுகள் சபை உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து முயற்சித்து வருவதாக, இலங்கையில் உள்ள ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் தெரிவித்தார்.



11 டிசம்பர் 2025 கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது உரையாற்றிய அவர் டித்வா சூறாவளி நாடு முழுவதும் அழிவு பாதையை ஏற்படுத்திய பின்னர், ஐ.நா. பேரிடர் மேலாண்மை மையத்துடன் இணைந்து ஏழு துறைகளை உள்ளடக்கிய முன்னுரிமைப் பட்டியலைத் தயாரித்துள்ளதாகக் கூறினார்.

அவுஸ்திரேலியா கனடா ஐரோப்பிய ஒன்றியம், சுவிட்சர்லாந்து, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வழங்கிய ஆதரவுடன், இந்த முயற்சிக்காக ஐ.நா ஏற்கனவே 9.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுள்ளது என்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் குறிப்பிட்டார். ஒருங்கிணைந்த திட்டத்துடன் வரும் மாதங்களில் மேலும் 26 மில்லியன் அமெரிக்க டொலர்களை திரட்ட அவர்கள் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையில் அமெரிக்க துணைச்செயலாளர்!



அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணை வெளிவிவகாரச் செயலாளர் அலிசன் ஹஜீக்கர், உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு சென்றுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார மற்றும் வணிக உறவுகளை ஆழப்படுத்துதல் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், இலங்கையின் பொருளாதார மற்றும் கடல்சார் இறையாண்மையை ஆதரிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பல்வேறு இருதரப்பு பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக அவர் இலங்கையின் பல அதிகாரிகளை சந்திப்பார் என்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தொடர்ந்து இலங்கையுடன் மூலோபாய கூட்டாண்மையைக் கட்டியெழுப்புகிறது என்றும், டித்வா சூறாவளியின் பேரழிவு தாக்கங்களுக்கு இலங்கை மக்கள் பதிலளிக்கும் போது அவர்களுடன் நிற்கிறது என்றும் அறிக்கை மேலும் கூறியுள்ளது.


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826



Christeen Seevaratnam
416-258-6759

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# தமிழக அரசு பெருந்தொகையான நிவாரணப் பொருட்களை இலங்கைக்கு அனுப்பியது!



டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளால் கடுமையாக பாதிக்கப் பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக தமிழக அரசு பெருந்தொகையான நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது.

டித்வா புயலின் தாக்கத்தால் இலங்கையின் பல மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள மக்களுக்கு உடனடி உதவி அளிக்கும் நோக்கில் தமிழக அரசு இந்த நிவார ணப் பொருட்களை அனுப்பியுள்ளது.

மருத்துவப் பொருட்கள், குடிநீர், உலர் உணவுப் பொருட்கள், தங்கும் கூடாரங்கள், போர்வைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய இந்த நிவாரணக் கப்பல் தமிழக அரசின் ஒருங்கி ணைப்பில் இலங்கையைச் சென்றடைந்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் சூழ்நிலையில் அங்குள்ள மக்களை ஆதரிக்கும் விதமாக இரு நாடுகளின் நட்புறவையும் மனிதாபிமான உணர் வையும் வலுப்படுத்தும் இந்த உதவி நடவடி க்கை, பரவலாக பாராட்டப்படுகிறது.

இந்த பேரிடரில் உயிரிழந்தோருக்கு தமிழக முதல் வர் மு.க. ஸ்டாலின் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்திருந்தார்.மேலும் இலங்கை மக்களின் துயரைத் துடைக்க தமிழக அரசு முழு மையான உதவிகளை மேற்கொள்ளும் என்றும், உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் உள்ளி ட்ட நிவாரணங்களை அனுப்ப ஆணையிட்டார்.

அதனடிப்படையில் சென்னை மற்றும் தூத்துக் குடி துறைமுகங்களில் இருந்து கடந்த சனிக் கிழமை இலங்கை நோக்கி பெரிய அளவில் நிவார ணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

சென்னையில் இருந்து அனுப்பும் கப்பலுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் கொடி யசைத்து அனுப்பினார். புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு தமிழக அரசு சார்பில் 950 தொன் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டு ள்ளது.

தமிழக அரசு, தேவையான அளவு கூடுதல் நிவாரண உதவிகளையும் வழங்க தயார் நிலையில் இருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அணையா விளக்குத் தூபி உடைப்புக்கு அமைச்சர் கண்டனம்! உடைத்தவர்களைக் கைது செய்யுமாறு என்.பி.பி. உறுப்பினர்!





செம்மணியில் அமைந்துள்ள அணையா விளக்கு நினைவுத் தூபி சேதப்படுத்தப்பட்ட நடவடிக்கை குறித்து கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வு களையும், வரலாற்று நினைவுகளையும் பிரதிபலிக்கும் முக்கியமான அடையாளமாக அமைந்துள்ள இத்தூபி யைக் குறி வைத்து மேற்கொள்ளப்பட்ட சேதம், சமூக ஒற்றுமைக்கும் ஜனநாயக மதிப்புகளுக்கும் எதிரானது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டவர்களை விரைவில் அடையாளம் காண வேண்டிய கட்டாயம் இருப்பதாக வும், அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் அமைதி மற்றும் சமூக ஒற்றுமையை எந்த விதமான எதிர்மறை கைகளும் பாதிக்க அரசு அனுமதிக்காது. மக்களின் உணர்வு களை புண்படுத்தும் இப்படியான நடவடிக்கைகளைத் தடுக்க சமூக ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

இதேசேவளை யாழ்ப்பாணம் - செம்மணி வளைவு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அணையா விளக்கு தூபியை சேதப்படுத்தியவர்களை கைது செய்யுமாறு கோரி காவல்நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் காவல் நிலையத்தில் 08.12.2025 ஞாயிற்றுக்கிழமை குறித்த முறைப்பாடு பதிவு செய்ய ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாநகர சபை உறுப்பினர் சண்முகநாதன் பிரதீபன் இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். செம்மணியில் மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதியில் கடந்த ஜீன் மாதம் அமைக்கப்பட்ட அணையாவிளக்கு நினைவுத் தூபி இனந்தெரியாதோரால் இரண்டாவது முறையாக 07 டிசம்பர் 2025 சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த தூபி இரண்டு மாதங்களுக்கு முன்னரும் விசமிகளால் சேதமாக்கப்பட்டிருந்த நிலையில் புனர மைப்பு செய்யப்பட்டது. இந்தநிலையில் அணையா விளக்கு தூபி மீண்டும் சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலாலியில் தரையிறங்கிய அமெரிக்க விமானம்!

நிவாரண பணிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை கொழும்பு க்கு வருகை தந்த அமெரிக்கா விமான படையின் C130J Super Hercules விமானம் 08 டிசம்பர் 2025 காலை நிவாரண பொருட்களுடன் யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் தரையிறங்கியது. நாடு முழு வதும் நிவார பணிகளுக்கு அமெரிக்க விமான படை யின் இரு Super Hercules விமானங்கள் வருகை தந்துள்ளதுடன் இலங்கை விமான படையினருடன் இணைந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கை குறித்துஅமெரிக்க தூதர் ஜீலி சங் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிடுகையில் இரண்டு ளரிநச ர்நசஉரடநள விமானங்கள் மூலம் பெருமளவிலான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இலங்கை விமானப்படை தளங்களுக்கு கொண்டு சென்றதாக தெரிவித்துள்ளார். இரண்டு சூப்பர் ஹெர்குலீஸ் விமானங்கள், 3 மாவட்ட ங்களுக்கு ஒரே பணிவிரைவான ஒத்துழைப்பின் மூலம் கொண்டு செல்லப்பட்ட பெரும் நிவாரணப் பொருட்களை இலங்கை விமானப்படை தரையணி உடனடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிரும் நடவடிக்கையில் ஈடுபட்டது. உடனடி உதவி தேவைப்படும் மக்களிடம் இப்பொருட்கள் சென்றடைகின்றன எனத் தெரிவித்து ள்ளார்.

அமெரிக்க இலங்கை பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான ஒத்துழைப்பின் வலிமையை மீண்டும் நிரூபிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேரிடர் காலத்தில் அரசியல் ஞானமே அவசியமானது! தமிழ்க்கட்சிகள் உணர வேண்டும்

இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், ஒவ்வொரு பேரிடரின் காலத்திலும் மக்களின் சுமை பலமடங்கு உயர்ந் துள்ளது. இயற்கை அனர்த்தங்களாகட்டும், பொருளாதார சரிவாகட்டும், ஆளுமைத் தவறு களின் காரணமாக ஏற்பட்ட சமூகக் கலக்கமா கட்டும் இவை அனைத்திலும் முதலில் பாதிக்கப் படுவது சாதாரண குடிமகனே. குறிப்பாக வட கிழக்கில் வாழும் தமிழர்களே பெரும் போகமாக இழப்புகளைச் சந்திப்பவர்கள். இப்படிப்பட்ட சூழலில் வழமையான அரசியல், தேர்தல் பாணி குற்றச்சாட்டுகள், பிரித்தெடுக்கும் கூற்றுகள் ஆகியவை மக்களின் துயரத்தை மேலும் மோசமாக்கும் என்பதைச் சமீபத்திய அனுபவங் களே நிரூபிக்கின்றன.

பேரிடர் காலத்தில் முன்னுரிமை மக்கள், பின்னு ரிமை அரசியல். பேரிடர் நேரத்தில் ஒரு அரசியல் தலைமையின் முதற் கடமை மக்களின் பாது காப்பு, உணவுப் பாதுகாப்பு, உடனடி நிவார ணம், மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றித் தீவிரமாக செயல்படுவது தான். ஆனால் வழக்கமான அரசியல் பேச்சுகள் யார் சரி? யார் தவறு? எதற்காக இவர் தேவை? எதற்காக அவரைத் தடுக்க வேண்டும்? என்ற விவாதங்கள் மக்கள் கவனத்தையும், வளங்களையும் தவறான திசைக்கு இழுத்துச் செல்கின்றன.

தமிழ் கட்சிகளின் பொறுப்பு இந்த சூழலில் இரட்டிப்பாகும். பேரிடர் காலம் என்பது அரசியல் புள்ளிகள் சேர்க்கும் நேரமல்ல மக்களின் பாது காப்பையும் அவர்களின் முழுமையான மீட்பை யும் உறுதிப்படுத்த வேண்டிய நேரம்.

தமிழ் அரசியலின் வரலாறு அதிக ஏமாற்றங் களையும் அதற்கு மேல் அதிக தியாகங்களையும் கண்டுள்ளது. இந்த வரலாற்றை நன்கு உணர்ந்த தமிழ்க் கட்சிகள் பின்வரும் அரசியல் ஞானத்தைப் பின்பற்ற வேண்டிய தருணம் இது:

பேரிடர் அனைவர் மீதும் விழும். அதனை எதிர்கொள்ள தமிழ்க் கட்சிகள் வேறுபாடுகளை ஒரு பக்கம் வைத்து குறைந்தபட்ச பொதுக் கட்டமைப்பில் இணைந்து செயல்பட வேண் டும். தஞ்சம், உணவு, மருந்துகள், தகவல் பரிமாற்றம் போன்ற அடிப்படை விஷயங்களில் கட்சிகள் நேரடி பங்காற்ற வேண்டும். இது அரசியல் அல்ல. மனித நேயம்.

மத்திய அரசோ, மாகாண நிர்வாகமோ, படையோ யார் இருந்தாலும் மக்களின் பாதுகாப்பிற்காக அவர்களுடன் பேசிக் கொண்டு இணைந்து செயல்படுவதில் தான் ஞானம் உள்ளது. பேரிடர் காலத்தில் அதிகாரத்துடன் மோதுவது மக்க ளுக்கே ஆபத்தாகும்.

பேரிடர் காலம் குற்றம் சாட்டும் நேரமல்ல. உண்மைகள் உறுதி செய்யப்பட்ட பின், பொதுநிலைக்கு திரும்பிய பிறகு அரசியல் விமர்சனங்கள் செய்யலாம். முன்னுரிமை உயிர் பாதுகாப்பு.

கடந்த பல தசாப்தங்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஒரு பாடம் கற்றுத் தந்துள்ளன. பேரிடர் நேர அரசியல் தவறுகள், தாமதமான நடவடிக்கைகள், ஒன்றிணையாத மனப்பான்மை ஆகியவை மக்களின் நம்பிக்கையை இழக்கும் மிகச் சுலபமான வழிகள்.

இன்று தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள் வறுமை வேலைவாய்ப்பு இழப்பு, உட்கட்ட மைப்பு பலவீனம், சமூக நீதிக்கான போராட் டம் இவையனைத்தும் பேரிடர் நேரத்தில் மேலும் பெருகுகின்றன. எனவே காலத்துக்கேற்ற அரசி யல் ஞானம் தான் தமிழரின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும்.

பேரிடர் நேரத்தில் வழமையான அரசியலைத் தொடர்வது, இருட்டில் விளக்கில்லாமல் நடப்ப தைப் போன்றது. தமிழ்க் கட்சிகள் இந்த நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டியது:

மக்கள் முதன்மை கொள்கை, நுண்ணறிவு உடைய முடிவுகள், ஒற்றுமையான செயல்பாடு, அரசியல் அல்ல, மனிதரசப் பணியே முன்னுரிமை. அரசியல் ஞானம் என்பது கோஷ மல்ல. அது மக்களின் உயிர் காப்பாற்றும் திறன்.

பேரிடர் காலத்தில் அந்த ஞானத்தை செயல்படு த்துவதே, தமிழரின் நலம் கருதும் உண்மை யான அரசியல். இதனை தமழ்த் தரப்புக்கள் எப் போது உணரப் போகிறார்கள் என்பதே கேள்வி.

# முன்னாள் கனடாப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ! தனிப்பட்ட வாழ்க்கையில் புதிய அத்தியாயம்!



கனடாவின் முன்னாள் பிரதமரும், உலக அரங்கில் மிகவும் அறியப்பட்ட அரசியல் தலைவருமான ஜஸ்டின் ட்ரூடோ தனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளார். அமெரிக்கப் பிரபல பொப் பாடகி கேட்டி பெர்ரியுடன் தனக்குள்ள உறவை அவர் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார். டிசம்பர் 6, 2025 அன்று, ஜப்பானில் இருவரும் ஒன்றாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்ததன் மூலம், பல மாதங்களாக நிலவி வந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

### தமிழ்மக்களின் பார்வையில் ட்ரூடோவின் மாற்றம்

கனடா வாழ் தமிழர்கள் மத்தியில் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு எப்போதும் ஒரு தனித்துவமான இடமுண்டு. அவர் பிரதமராக இருந்த காலத்தில், பொங்கல் விழாக்கள் மற்றும் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகளில் வேட்டி அணிந்து கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதனால் தமிழ்ச் சமூகம் அவரை ஒரு சிறந்த குடும்பத் தலைவனாகவும் கலாச்சாரங்களுக்கு மதிப்பளிக்கும் ஒருவராகவும் பார்த்தது. அவரது முன்னாள் மனைவி சோஃபி மற்றும் குழந்தைகளுடன் அவர் பொதுவெளியில் தோன்றிய காட்சிகள், தமிழர்களின் குடும்ப விழுமியங்களுக்கு நெருக்கமாக இருந்ததால் அவர் மீது பெரும் நன்மதிப்பு உருவானது.

எனினும், 2023 இல் சோஃபியுடனான விவாகரத்து அறிவிப்பு மற்றும் ஜனவரி 2025இல் பிரதமர் பதவியிலிருந்து விலகல் ஆகிய நிகழ்வுகளுக்குப் பிறகு ட்ரூடோவின் பொது வாழ்க்கை முறை மாறியுள்ளது. தற்போது ஒரு ஹாலிவுட் நட்சத்திரத்துடனான அவரது உறவு, தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரியப் பார்வைக்குச் சற்று வியப்பளிப்பதாக அமைந்தாலும், இது அவரது தனிப்பட்ட வாழ்க்கையின் அடுத்தகட்ட நகர்வாகவே பார்க்கப்படுகிறது. ஒரு காலத்தில் அரசியல் மற்றும் குடும்பப் பொறுப்புகளுக்குள் கட்டுப்பட்டிருந்த அவர், தற்போது உலகச் சுற்றுப் பயணங்கள் மற்றும் நட்சத்திரக் கொண்டாட்டங்கள் என மாறுபட்டதொரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

### அரசியலுக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை

பிரதமர் பதவியிலிருந்து விலகிய பின்னர், ட்ரூடோ அரசியல் அழுத்தங்களிலிருந்து விடுபட்டுள்ளார். கேட்டி பெர்ரியும் தனது நீண்ட காலக் காதலரான ஆர்லாண்டோ ப்ளூமை பிரிந்த நிலையில், ட்ரூடோவுடன் இணைந்துள்ளார். இருவருமே தங்கள் முந்தைய உறவுகளிலிருந்து வெளியேறி ஒத்த அலைவரிசையில் ஒருவருக்கொருவர் பங்காளியாக இணைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் பிரதமராக அவர் தமிழ் மக்களுக்குச் செய்த பங்களிப்புகள் மறக்க முடியாதவை என்றாலும், இன்றைய சூழலில் ஜஸ்டின் ட்ரூடோ ஒரு சர்வதேசப் பிரபலமாக மாறி விட்டார் என்பதே நிதர்சனம். இந்த மாற்றம், அவரைத் தொடர்ந்து ஆதரித்து வந்த தமிழ் மக்களுக்கு ஒரு புதிய கோணத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

### ஜப்பானில் நடந்த அதிகாரபூர்வ அறிவிப்பு

ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் கேட்டி பெர்ரி இருவரும் ஜப்பானின் டோக்கியோ நகரில் விடுமுறையைக் கழித்து வருகின்றனர். அங்கு அவர்கள் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஃபுமியோ கிஷிடாவை டிசம்பர் 3, 2025 அன்று நேரில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர், டிசம்பர் 4, 2025 அன்று ஃபுமியோ கிஷிடா தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் ஒரு புகைப்படத்தைப் பகிர்ந்திருந்தார். அதில் அவர் கேட்டி பெர்ரியை ட்ரூடோவின் பங்காளி என்று குறிப்பிட்டிருந்தது உலக அளவில் கவனத்தை ஈர்த்தது.

இதனைத் தொடர்ந்து, கேட்டி பெர்ரியும் டிசம்பர் 6, 2025 அன்று தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ட்ரூடோவுடன் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்களைப் பகிர்ந்து தங்கள் உறவை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார். ஜீலை 28, 2025 அன்று மொன்றியாலில் இவர்கள் இருவரும் முதன் முதலாக ஒன்றாக உணவருந்தியதாகச் செய்திகள் கசிந்த நிலையில் தற்போது அது உறுதியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# இயற்கையின் இடர் தடகளத்தில் நல்லது கெடுவதும் நன்மையாவதும்



2004ம் ஆண்டு சுனாமி நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்து செயற்பட சந்திரிகா அரசு முனைந்த போது அதனை ஆட்சேபித்து அமைச்சர் பதவிகளையும் துறந்து ஆட்சியிலிருந்து வெளியேறியது ஜே.வி.பி. இருபது ஆண்டுகளின் பின்னர் பேரிடர்ப் பணி புரிந்து நாட்டைக் கட்டியெழுப்ப புலம்பெயர்ந்த மக்களிடம் (தமிழர்களே அதிகம்) உதவியை நாடுகிறது அதே ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி. இதுவும் இயற்கையின் நியதி போலும்.

இயற்கையின் பெருஞ்சீற்றம் இரத்தின துவீபம் என அழைக்கப்பட்டு வந்த இலங்கை எனும் குட்டித்தீவை முற்று முழுதாக சீரழித்துள்ளது.

75 வருட அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக ஓர் அணி - புரட்சிகர சிந்தனையாளர்களின் ஆட்சி ஆரம்பமாகி ஒரு வருட முடிவு காலத்தில் இவ்வாறான ஒரு பேரழிவை கையாளக்கூடியதாக திட்டமிடவில்லையென்பதை உள்நாட்டில் பலரும் கூறுமளவுக்கு நிலைமை உள்ளது.

அரச நிர்வாகத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஒன்று உள்ளது. இது நேரடியாக ஜனாதிபதி அநுர குமரவின் தலைமையில் இயங்குகிறது. இந்த அமைச்சின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் உள்ளது. இதற்கான சட்டம் 2005ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு, பூகம்பம், சுனாமி உட்பட்ட பதினேழு வகையான அனர்த்த வேளைகளில் உடனடிப் பணிகளை நிறைவேற்றுவதே இந்த நிலையத்தின் பிரதான பணி.

1913, 1940, 1947, 1950ம் ஆண்டுகளில் களனி, கல, ஜின், மகாவலி கங்கைகள் பெருக்கெடுத்து பாரிய அழிவை ஏற்படுத்தின. பின் நவீனத்துவ காலத்தில் 2003ம் ஆண்டில் தெற்கு மற்றும் தென்மேற்கு மாவட்டங்களில் ஏற்பட்ட அனர்த்தத்தில் 260 பொதுமக்கள் கொல்லப்பட்டதையும், ஆயிரமாயிரம் பேர் இடம்பெயர்ந்ததையும் அரசாங்கத் தகவல் பதிவு செய்துள்ளது. 1978ம் ஆண்டு சூறாவளி இலங்கை மக்களை வேறுபாடின்றி எதிர்பாராத அழிவுக்குள்ளாக்கியது.

இதன் பின்னரான பேரழிவை ஏற்படுத்தியது நேற்றுப் போல் இடம் பெற்ற சுனாமி. 2004 டிசம்பர் 26ம் திகதியான கிறிஸ்மஸ் நாளன்று இது இடம் பெற்றது. மின்னாமல் முழங்காமல் என்று கூறுவது போன்று இலங்கை வரலாற்றில் எதிர்பார்த்திராத அனர்த்தத்தை இது ஏற்படுத்தியது.

வடக்கின் கரையோரத்திலிருந்து இலங்கை வரைபடத்தின் கீழ்மூலையிலுள்ள அம்பாந்தோட்டை வரையான கரையோர பிரதேசங்களில் ஆறு மணித்தியாலத்தில் பல்லாயிரம் பேரை கொன்றொழித்த பேரலை இது. மக்களின் இருப்பிடங்கள், தொழிலகங்கள், வணக்கத் தலங்கள், வாழ்வாதார மூலங்கள், பாடசாலைகள், விவசாயப் பண்ணைகள் என்று எதனையுமே இது விட்டு வைக்கவில்லை.

இலங்கை அரசியலில் இதே சுனாமி சிலரை அடையாளம் காட்டவும் வைத்தது. அப்போது சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தது. ஜே.வி.பி. இதில் பங்காளராக அமைச்சுப் பதவிகளிலும் அமர்ந்திருந்தது. அநுரகுமர, விஜித ஹேரத் போன்றவர்கள் அமைச்சர்களாக இருந்தனர். சுனாமி நிவாரணத்துக்காக பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை நிதி வழங்கிய நாடுகள் சந்திரிகாவுக்கு ஏற்படுத்தின. அவரும் அதனை ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்து கட்டமைப்பை உருவாக்க முனைந்த வேளை அதனை ஆட்சேபித்த ஜே.வி.பி. தங்கள் அமைச்சுப் பதவிகளையும் துறந்து ஆட்சிக் கூட்டிலிருந்து வெளியேறியது. பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளையும் இணைப்பதால் அவர்களுக்கு அரசியல் அங்கீகாரம் கிடைத்துவிடும் என்பதே ஜே.வி.பி.யின் எதிர்ப்புக்கு காரணமாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக இலங்கையிலிருக்கும் அமெரிக்க தூதரகம் தனது அரசுக்கு அனுப்பி வைத்த தகவல் விக்கி லீக்சில் இடம் பெற்றுள்ளது. அப்போது சந்திரிகா அரசில் கலாசார மற்றும் மரபுரிமை அமைச்சராக விருந்த விஜித ஹேரத் (தற்போதைய வெளிவிவகார அமைச்சர்)இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், ஆட்சியின் பங்காளர்களான தங்களின் ஆட்சேபணையை பொருட்படுத்தாது சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளை பொதுக்கட்டமைப்பில் சேர்த்துக் கொள்ள முடிவெடுத்தார் என்று குறிப்பிட்டதாக விக்கி லீக்ஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

விதிப்பயனோ அல்லது இயற்கையின் நியதியோ சுனாமியிலும் பார்க்க மிகமிக மோசமான பேரழிவை ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி நாட்டை ஆட்சி புரியும் காலத்தில் ஏற்பட்டுள்ளது. தமது வல்லமைக்கு உட்பட்ட வகையிலும் கிடைக்கும் சர்வதேச உதவிகளைப் பயன்படுத்தியும் நாட்டை மீளெழுப்ப அரசு செயற்களத்தில் இறங்கியுள்ளது. அதேசமயம், புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் உதவியை இது பகிரங்கமாகக் கோரியுள்ளது.

புலம்பெயர் இலங்கையர் என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும், இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களே. தமிழ் மக்களினுடைய உரிமைப் போராட்டத்தை நசுக்க போர் வெறி கொண்ட மகிந்த அரசுக்கு பக்கபலமாக அப்போது நின்றது ஜே.வி.பி. சுனாமிக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளை சந்திரிகா இணைத்துக் கொள்ள முயன்ற போது அதனை எதிர்த்து முறித்தழித்ததும் இதே ஜே.வி.பி. இப்போது போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகப் புறப்பட்ட தமிழர்களின் உதவியை இது நாடி நிற்கிறது. இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் உள்நாட்டில் அநுர அரசு மேற்கொள்ளும் பணிகள் வெளிநாடுகளில் இதன் மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த நம்பிக்கையின் பயனாகவே உலகநாடுகள் அனைத்தும் கிள்ளிக் கொடுக்காமல் இலங்கைக்கு அள்ளிக் கொடுக்கின்றன. இன்றைய காலகட்டத்தில் வேறொரு கட்சியின் ஆட்சி இலங்கையில் இருந்திருக்குமாயின் இந்தளவுக்கு சர்வதேச ஆதரவு கிடைத்திருக்காது என்று சொல்லலாம். இதற்குக் காரணம் ஊழல் ஒழிப்பில் முழுமையாக இறங்கி ஊழலற்ற அரசாட்சி ஒன்றை நோக்கி தேசிய மக்கள் சக்தி அரசு பயணிப்பதே என்று துணிந்து சொல்லக் கூடியதாக இருக்கிறது.

ஒரு வருட ஆட்சிக்குள் அநுர குமர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இன, மத பேதமற்ற நிர்வாகமாக முழுமையாக மாறவில்லை. பொது மக்கள் நம்பக்கூடிய வகையில் தனது பாதையை இவ்வழியில் அது அமைத்து வருவது மட்டும் தெரிகிறது. இந்த நம்பிக்கையே சர்வதேசத்தின் பங்களிப்புக்கு அடிப்படைக் காரணம்.

அனைத்து மக்களையும் இணைத்தவாறு நாட்டை இழுத்துச் செல்ல முயற்சித்த வேளையில் புயலும், வெள்ளமும், நிலச்சரிவும் ஒன்று சேர்ந்து அனைத்தையும் புரட்டிப் போட்டுள்ளது. மரணித்தோர் தொகை அடுத்த சில நாட்களில் ஆயிரத்தைத் தாண்டலாம் என எதிர்வு கூறப்படுகிறது. காணாமல் போனோர் தொகை பற்றி இப்போது எதுவும் கூறமுடியாத நிலை காணப்படுகிறது.

மலையகமே கூடுதலான பாதிப்பைக் கண்டுள்ளது. சில கிராமங்கள் அடியோது காணாமல் போயுள்ளன. துயில் கொண்டிருந்த பல குடும்பங்கள் புதையுண்டு போயுள்ளன. உடனடியாக தங்கள் தொகுதிகளுக்குச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டிய மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற வரவு செலவு விவாதத்தை முக்கியப்படுத்தி கொழும்பில் தங்கி விட்டனர். அத்துடன், அரசாங்கத்தின் செயற்பாடுகளை குறை கூறி ஊடகங்கள் ஊடாக தங்கள் செல்வாக்கை அதிகரிக்க முற்பட்டனர். தமிழ் அரசியல்வாதிகளும் இதில் வேறுபடவில்லை.

இந்தியா, சீனா, அமெரிக்கா உட்பட உலக நாடுகள் தாராளமாக உதவி வருகின்றன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இருபத்தையாயிரம் முதல் ஐம்பதினாயிரம் ரூபா வரையான நிவாரணம் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிவாரணம் உடனடித் தேவைகளுக்கு மட்டுமே. பிரதேச வேறுபாடின்றி சகலருக்கும் நிவாரணம் வழங்கப்படுவதை காணமுடிகிறது.

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

எனினும், எதிர்க்கட்சிகள் தாங்கள் நல்லவற்றுக்கும் எதிரானவர்களே என்பதைக் காட்டும் பாணியில் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். ஆக்கபூர்வமான பணிகள் எதனையும் இவர்கள் செய்வதாகத் தெரியவில்லை. பேரிடரைப் பயன்படுத்தி தங்கள் வாக்கு வங்கியை நிரப்பலாமென எண்ணிச் செயற்படும் இவர்களை சர்வதேசம் கேள்விக்குறியாக்கியுள்ளது. நித்தம் நித்தம் கிடைத்து வரும் நிவாரண உதவிகள் எதிரணிகளை நிலை குலைய வைக்கிறது. அதனால் ஏதாவது குற்றங்களை கண்டுபிடிக்க பூதக்கண்ணாடிகளுடன் இவர்கள் திரிகிறார்கள்.

நிவாரண திட்டமிடலின்மை, தாமதமான நிவாரணப்பணி என்பவைகளை முன்னிறுத்தி ஆட்சித் தரப்பை மக்கள் செல்வாக்கிலிருந்து இறக்கி விடலாமென இவர்கள் எண்ணியது தலைகரணமாக்கியுள்ளது, சர்வதேச நிவாரணமும் அரசாங்கத்தின் வீச்சான செயற்பாடும்.

மறுபுறத்தில் ஆட்சி புரியும் தேசிய மக்கள் சக்தி அனைத்து மக்களையும் ஒரே நோக்கில் இருத்தி தனது பணிகளை மேற்கொள்கிறது. அரசியல் ஆதாயம் தேடப்படுவதாக இதனை எவரும் பார்க்கவில்லை. பேரிடரிலிருந்து நாட்டை மீட்டு அதனை நவீன இலங்கையாக கட்டியெழுப்ப காலம் தேவையென்று கூறி பொதுத் தேர்தலை குறைந்தது பத்தாண்டுகளுக்காவது பின்போட (ரில்வின் சில்வாவின் ஆசையும் இதுதான்) தேசிய மக்கள் சக்திக்கு இதன் நிவாரணப் பணி வரப்பிரசாதமாக அமையலாம். மாகாண சபைத் தேர்தல் பற்றி இப்போதைக்கு எவரும் வாய் திறக்க முடியாத நிலைமை வந்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி பேரிடர் காலத்தில் மேற்கொள்ளும் சாதகமான செயற்பாடுகளும், எதிர்க்கட்சிகளின் இயக்கமற்ற குற்றக் கூச்சல்களும் நாட்டின் எதிர்காலம் எதுவாகும் என்பதை தீர்மானிக்கப்போகும் சக்திகள். இதில் சர்வதேசத்தின் பங்கு முக்கிய இடத்தை வகிக்கும் - புலம்பெயர்ந்தவர்களின் பங்கும் கூட.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 டிசம்பர் 2025 முதல் 12 டிசம்பர் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் உயர்திரு V.K நாகராஜா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது பதினொராவது ஆண்டு நினைவு நாள் 03 டிசம்பர் 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு V.K.நாகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனை பிரார்த்திக்கின்றார்கள்.


## 26 வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி

போராலை பளைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 26வது ஆண்டு நினைவு தினம் 10 டிசம்பர் 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண் டிருந்த திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களது 25வது ஆண்டு நினைவு நாள் 04 டிசம்பர் 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வல்லிபுரம் கந்தசாமி

தெல்லிப்பளை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த முன்னாள் இ.போ.ச சாரதி வல்லிபுரம் கந்தசாமி அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 09 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அவரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வல்லிபுரம் கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பகீரதன் முத்துக்குமாரசாமி

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பகீரதன் முத்துக்குமாரசாமி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு தினம் 07 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். பகீரதன் முத்துக்குமாரசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத் தருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 நவம்பர் 2025 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாச்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





30 நவம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சரண்ராஜி தர்சிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் அட்சயன் சரண்ராஜின் 15வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அட்சயன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




03 டிசம்பர் 2025 புதன்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




04 டிசம்பர் 2025 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பேரின்பமூர்த்தி இளையதம்பி அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 டிசம்பர் 2025 வெள்ளிக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இந்திராதேவி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




07 டிசம்பர் 2025 ஞாயிற்றுக் கிழமை யாழ்.ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பகீரதன் முத்துக்குமாரசாமி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




09 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செந்தாரி கிளின்ஸ் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செந்தாரி கிளின்ஸ் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




09 டிசம்பர் 2025 செவ்வாய்க்கிழமை தெல்லிப்பளை கட்டுவன் வடக்கைச் சேர்ந்த முன்னாள் இ.போ.ச. சாரதி திரு கந்தசாமி வல்லிபுரம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




10 டிசம்பர் 2025 புதன்கிழமை பேராலை பளையைச் சேர்ந்த திருமதி இலட்சுமி கிருஷ்ணபிள்ளை அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




11 டிசம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மயூரி இராஜேந்திரன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




27 நவம்பர் 2025 வியாழக்கிழமை பேரலை பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா - கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

**திரு இளங்குமரன் சிவஞானம்**

வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஓட்டவா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த எங்கள் சகோதரன் இளங்குமரன் சிவஞானம் அவர்களது மறைவுச் செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கேற்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும்

தூர தேசங்களில் இருந்து தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்

அன்னாரது பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்ட போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் மலர்மாலை அணிவித்தும் மலர் வளையம் சாத்தியும் அஞ்சலி செய்தோருக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் அனுதாபச் செய்திகள் வெளியிட்டோருக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

---

அன்னாரின் 31ம்நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையை முன்னிட்டு 14 டிசம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.

திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள். ஓம்சாந்தி!

# இரு வேறு காலங்களில் இரு உணவுப் பொட்டலங்கள்! மனிதாபிமானமா? அரசியலா?

இலங்கை வடக்கின் வானில் வீசப்பட்ட இரண்டு வகை ‘உணவுப் பொட்டலங்கள்’. ஒன்று 1987 ஆம் ஆண்டில் பசியால் தவித்த தமிழ் மக்களை உதவி செய்வதற்காக இந்தியா மேற்கொண்ட ஒப்பரேஷன் ‘பூமாலை’, ஆனால் அதன் பின்னால் மறைந்திருந்தது கடுமையான அரசியல் உத்தி.






மற்றொன்று 2025இல் இயற்கை பேரழிவு சூழ்நிலையில் ஒப்பரேஷன் ‘சாகர் பந்து’, வெளிப்படையான மனிதாபிமான நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட உதவி.

இந்த இரண்டு நடவடிக்கைகளின் நேரம், நோக்கம், செயல்முறை மற்றும் அதன் விளைவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கையின் கடந்த காலமும் தற்போதைய பிராந்திய உறவுகளும் எவ்வாறு மாறியிருக்கின்றன என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

### ஒப்பரேஷன் பூமாலை 1987

வடக்கில் இராணுவ முற்றுகை, கடுமையான உணவுப் பற்றாக்குறை காரணமாக தருணம் பார்த்திருந்த இந்தியா அரசு உத்தரவில் இந்திய விமானங்கள் அனுமதியின்றி வடக்கில் உணவுப் பொட்டலங்கள் வீச்சின.

இதன் விளைவாக இந்திய அமைதி பாதுகாப்புப் படை (IPKF) இலங்கையில் நிலை கொள்ள வழி வகுத்தது. இது தமிழ்மக்கள் மீதான கலப்பு உணர்வுகளையும் அரசியல் பதற்றத்தையும் தோற்றுவித்தது.

### ஒப்பரேஷன் சாகர் பந்து 2025

சூறாவளி, வெள்ளம், இயற்கை பேரழிவால் பாதிப்பு அடைந்த இலங்கை மக்களுக்கு இந்திய கடற்படை உணவு, மருந்து, உதவிப்பொருட்கள் கொண்டு வந்தது. இது எந்த அரசியல் அழுத்தமுமின்றி நேரடி உதவி. இருநாடுகளுக்கு இடையே நம்பிக்கை உயர் நிலையை அடைந்தது.

### இனி வரலாற்றின் முதல் அத்தியாயத்தை நோக்குவோம்

**1987இல் வானில் விழுந்த ‘பூமாலை’ பொட்டலங்களின் அரசியல் நிழல்கள்**

1987ம் ஆண்டு வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இராணுவக் கெடுபிடிகளால் உணவுப் பற்றாக்குறை உச்சத்தை எட்டியது. மருத்துவப் பொருட்கள், குழந்தைகளுக்கான ஊட்டச் சத்து, தானியங்கள் எதுவும் சரியாக கிடைக்கவில்லை. இதே நேரத்தில் இந்தியா மனிதாபிமான உதவி என்ற கோஷத்தோடு ஒப்பரேஷன் பூமாலை எனும் நடவடிக்கையை திடீரெனத் தொடங்கியது.

ஆனால் உதவிக்குள் அரசியல் கலந்து இருந்தது.

இலங்கை அரசின் அனுமதியின்றி இந்திய விமானங்கள் இலங்கை வான் வெளியில் நுழைந்தன. இது ஒரு அரசியல் அழுத்தம், ஒரு வகையில் எங்கள் கட்டுப்பாட்டை ஏற்க வேண்டும் என்ற எச்சரிக்கை என பல அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதன் பின் விளைவாக இந்தியா அமைதிகாக்கும் படை IPKF என்ற பெயரில் ஆயிரக்கணக்கான படைகளை இலங்கைக்குள் கொண்டு வந்தது. தமிழர் வரலாற்றில் இது உணவு பொட்டலத்துடன் வந்த இராணுவம் என்ற கசப்பான பதிவை விட்டுச் சென்றது. இப்போது காலம் மாறியது. கதையும் மாறியது.

2025இல் இலங்கை கடுமையான இயற்கை பேரழிவை எதிர்கொண்ட போது இந்திய கடற்படை சாகர் பந்து நடவடிக்கையைத் தொடங்கியது. இந்த முறை அனுமதி, ஒருங்கிணைப்பு, கூட்டு நிர்வாகம் என அனைத்தும் சீராக நடந்தன.

இந்தியக் கடற்படை கப்பல்களில் உணவு குடிநீர் மருந்துகள் அவசர குடியிருப்பு பொருட்கள் மீட்பு உபகரணங்கள் என்பன போய்ச் சேர்ந்தன.

இந்த உதவிக்குப் பின் எந்த தலையீட்டோ, எந்த அரசியல் தேவையோ, எந்த நிலை நிறுத்த வேண்டுகோளோ இல்லை. இதன் மூலம் சாகர் பந்து உண்மையான மனிதாபிமான நடவடிக்கை என்ற அடையாளத்துடன் மக்கள் மனதில் பதிந்தது.

அதே பொட்டலங்கள். ஆனால் இரண்டு காலங்களில் இரண்டு வேறுபட்ட அர்த்தங்கள்

1.சூழ்நிலை பூமாலை (1987) போர்க் காலம். இலங்கை அரசின் அனுமதியின்றி நடந்தது.

2 சாகர் பந்து (2025) இயற்கை பேரழிவு. இலங்கை அரசின உத்தியோகபூர்வ அழைப்பில் நடந்தது.

இரு வேறுபட்ட நோக்கம் இந்திய அரசிடம் இருந்தது. ஒப்பரேஷன் பூமாலையில் மனிதாபிமானமும் இருந்தது. அரசியல் அழுத்தமும் இருந்தது. ஆனால் ஒப்பரேஷன் சாகர் பந்துவில் தூய மனிதாபிமானம் இருந்தாலும் இலங்கை அரசை சீனா பக்கம் சாய்ந்து விடாது கவனித்துக் கொள்ள வேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு.

இந்தியாவின் 1987 மற்றும் 2025 காலப்பகுதியில் நடந்த ஒப்பரேஷன் பூமாலை, மற்றும் சாகர்பந்து இரண்டையும் ஒப்பீடு செய்து நோக்கினால் பூமாலை: IPKF, மக்கள் உயிரிழப்புக்களையும் ஆயிரக்கணக்கான போராளிகளையும் காவு கொண்டது. ஆனால் ஒப்பரேஷன் சாகர் பந்து நடவடிக்கையில் எந்த இராணுவ நடவடிக்கைகளும் இல்லை

எனவே இந்த இரண்டு நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்கு என்ன கற்றுக் கொடுக்கின்றன என்பதை உற்று நோக்கினால் ஒப்பரேஷன் பூமாலை மனிதாபிமான நடவடிக்கை அரசியலின் கருவியாக மாறலாம் உதவி ஒற்றைப் பொட்டலங்களாக வரலாம், ஆனால் அதன் பின்னால் நிலத்தை மாற்றும் சக்திகள் பதுங்கிக் கிடக்கலாம்.


அதேவேளை ஒப்பரேஷன் சாகர் பந்து மனிதாபிமானம் எளிமையாகத் தான் இருக்க முடியும் நாடுகளுக்கிடையிலான நம்பிக்கை உருவானால் உதவி நிகழ்வுகள் அரசியல் சுமையின்றி நடக்க முடியும்

இதில் இருந்து தமிழர்களாகிய நாம் வரலாறை மறக்கக் கூடாது. ஆனால் புதிய வரலாறைப் பார்க்க கற்றுக் கொள்கிறோம் 1987 மற்றும் 2025 இரண்டும் உணவுப் பொட்டலங்களை மையமாகக் கொண்ட நிகழ்வுகள் என்ற முறையில் ஒரே மாதிரி தோன்றினாலும், அவை இலங்கையின் சர்வதேச உறவுகளும் மனிதாபிமான அணுகுமுறையும் எவ்வாறு மாற்றமடைந்திருக்கின்றன என்பதைக் காட்டும் இரண்டு வேறுபட்ட காலக் கட்டங்கள்.

ஒரு காலத்தில் உணவுப் பொட்டலம் அரசியலின் தூண்டில் ஆனது. இன்று அது மனிதாபிமானத்தின் அடையாளம் ஆனது.

இந்த மாற்றம் இலங்கை அரசியல் எவ்வாறு எந்தக் கால கட்டத்திலும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டு இராஜதந்திர ரீதியாகவும் பிராந்திய சர்வதே அரங்கில் பரிணாமம் அடைந்தது என்பதற்கான முக்கிய வரலாற்றுச் சான்று.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# டித்வா புயல் ஜனாதிபதி அநுராவைப் பலப்படுத்தியுள்ளதா?

ரணில் விக்கிரமசிங்கவால் எல்போர்ட் அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு டித்வா புயல் ஒரு சோதனையாக வந்திருக்கிறது. கடந்த 14 மாதங்களாக தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த எதிர்க் கட்சிகள் நுகேகொடவில் ஓர்



ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்குப்படுத்தி மெல்லத் தலைதூக்க முயற்சித்தன. அந்தப் பேரணி திறந்து விட்ட வாய்ப்புகளை விட அதிக வாய்ப்புகளை டித்வா புயல் எதிர்க்கட்சிகளுக்கு திறந்து விட்டிருக்கிறது. இது ஒரு எல்போர்ட் அரசாங்கம் என்று நிரூபிப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சிகள் பயன்படுத்துகின்றன.

எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

முதலாவது குற்றச்சாட்டு அரசாங்கம் முன்னெச்சரிக்கையோடு நடக்கவில்லை என்பது. இதில் ஓரளவுக்கு உண்மை உண்டு. இந்திய வானிலை ஆய்வு மையம் புயல் தொடர்பாக நொவம்பர் 13 ஆம் திகதியே எச்சரித்திருந்தது. நவம்பர் 26வரை அனைத்துத் தகவல்களும் இலங்கையுடன் பரிமாறப்பட்டுள்ளன என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளம் கூறுகிறது. மேலும் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவராகிய பேராசிரியர் பிரதீபராஜா நொவம்பர் மாதக் கடைசியில் வரக்கூடிய புயலைக் குறித்து முன்னெச்சரிக்கை விடுத்திருந்தார். அவரைப் போலவே தமிழகத்தைச் சேர்ந்த வானிலை முன்னறிவிப்பாளர் செல்வக்குமார் தன்னுடைய யூடியூப் தளத்தில் புயலின் வருகையைக் குறித்து எச்சரித்திருந்தார். ஆனால் இந்த எச்சரிக்கைகளை அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ ஏன் கவனத்தில் எடுக்கவில்லை? புயல் நாட்டைத் தாக்கப் போகிறது என்பதனை வளிமண்டலவியல் திணைக்களம் உரிய நேரத்தில்,உரிய வேகத்தில் எச்சரித்திருக்கவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இரண்டாவது குற்றச்சாட்டு, அரசு திணைக்களங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்பது. பாதிக்கப்பட்ட மக்களும் அதனைச் சுட்டிக்காட்டுகிறார்கள். சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இந்த விடயத்தில் முழு அளவுக்கு ஒருங்கிணைப்போடு செயற்பட்டு இருந்திருந்தால் இழப்பின் அளவைக் குறைத்திருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக வளிமண்டலவியல் திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவத் நிலையம் போன்றன இந்த விடயத்தில் மக்களை எச்சரிக்கத் தவறி விட்டதாகவும், தங்களுக்கிடையில் ஒருங்கிணைப்போடு செயல்படவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுராத ஜெயரட்ன ரவுப் ஹக்கீம் போன்றவர்கள் நாடாளுமன்றத்தில் வைத்துச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளை ஒரே வேளையில் திறக்கப்பட்டதால் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கைக் குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மக்களை எச்சரிக்கத் தவறியமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்த விடயத்தில் திணைக்களுங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு இல்லாதது சேதத்தை அதிகப்படுத்தி இருப்பதனால் வருங்காலத்தில் நதிப் படுக்கைகளுக்கு என்று அதிகார சபை ஒன்றை உருவாக்கும் யோசனையை ரவுப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருக்கிறார்.

மூன்றாவது குற்றச்சாட்டு முன்னெச்சரிக்கை உணர்வோடு வருமுன் காக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து இருந்திருந்தால் சேதத்தின் அளவைக் குறைத்திருக்கலாம் என்பது. பருவ மழையின் போது மண் சரிவு ஏற்படும் பிரதேசங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.மழை வீழ்ச்சி அதிகரிக்கும் போது மண் சரிவு அபாயம் உண்டு என்பது சம்பந்தப்பட்ட எல்லா அரசுக்கு கட்டமைப்புக்களுக்கும் தெரியும் என்பதால் வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே அனுமானித்து பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களில் இருந்து மக்களை முன்கூட்டியே இடம் மாற்றி இருந்திருந்தால் சேதத்தின் அளவை குறைத்து இருக்கலாமா என்ற கேள்வி உண்டு. இந்த விடயத்தில் அரசாங்கம் அனர்த்த காலம் ஒன்றை நோக்கி வினைத்திறனோடு செயல்படவில்லை என்றும் அனர்த்தத்தின் போதும் அதன் பின்னரும் நிலைமைகளைச் சரியாக முகாமை செய்யவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை அடுக்குகின்றன.

எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை, அவை வழமையான எதிர்ப்பு அரசியல் என்ற பெட்டிக்குள் தூக்கிப் போட்டு விட முடியாது. அதே சமயம் நுகேகொட பேரணிக்குப் பின் அரசங்கத்தை விமர்சிப்பதற்கு கிடைத்த அதிகரித்த வாய்ப்பாக புயலுக்கு பின்னரான அரசியற் சூழலை எதிர்க்கட்சிகள் பயன்படுத்துகின்றன என்பதும் உண்மை.

எவ்வளவு தான் தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்திருந்தாலும் வானிலை மாற்றங்களை மிகத் துல்லியமாக எதிர்வுகூற முடியாது என்று அரசாங்கத்திற்கு ஆதரவான தமிழ் புத்திஜீவிகள் சமூக வலைத்தளங்களில் எழுதி வருகிறார்கள். தொழில்நுட்பம் அதிகம் வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட இயற்கை அனர்த்தங்களைக் குறித்து மிகச் சரியாகக் கணிக்க முடிவதில்லை என்றும் அவ்வாறு கணிப்பிட்டு இருந்தாலும் அழிவுகளை முழுமையாகத் தடுக்க முடிவதில்லை என்று அவர்கள் வாதிடுகிறார்கள். அதில் உண்மை உண்டு. ஆனால் இந்திய வானிலை அவதானிப்பு மையம் உரிய காலத்தில் எச்சரித்திருந்த போதிலும் துறைசார் வல்லுநர்கள் சிலர் உள்நாட்டிலும் அயல் நாட்டிலும் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் இது தொடர்பாக எச்சரிக்கைகளை விடுத்திருந்த போதிலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஏன் அதனை கவனத்தில் எடுக்கத் தவறின?

இப்பொழுது அழிவு நடந்து விட்டது. இனி இறந்த காலத்தைப் போஸ்ட் மோர்ட்டம் செய்து கொண்டிருப்பதை விடவும் மண்ணில் புதைந்திருப்பவர்களை எப்படி மீட்பது? உடைந்து தொங்கும் பாலங்களை எப்படிச் சீரமைப்பது? சிதைந்து போன வாழ்வை எப்படி மீளக் கட்டியெழுப்புவது? என்பதுதான் முதன்மைச் சவால்.

நாட்டின் முழுக் கவனமும் புயலுக்குப் பின்னரான மனிதாபிமான நிலவரங்களின் மீது குவிந்திருக்கின்றது.நாட்டுக்கு உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் அதிகளவு மனிதாபிமான உதவிகள் கிடைக்கின்றன.

தமிழ்ப் பகுதிகளில் உயிர் இழப்பு ஒப்பீட்டளவில் குறைவு. ஆனால் சொத்திழப்பு உண்டு. அடிக்கட்டுமானங்கள் சேதமடைந்து விட்டன. முல்லைத்தீவு மாவட்டம் சில நாட்கள் துண்டிக்கப்பட்டிருந்தது. மன்னாரில் 15000க்கும் குறையாத கால்நடைகள் கொல்லப்பட்டு விட்டன. திருகோணமலையிலும் மலையகத்திலும் கால்நடைகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டிருக்கின்றன. புயலுக்குப் பின் கிட்டத்தட்ட ஒரு கிழமை கழித்து இக் கட்டுரை எழுதப்படுகையிலும் கூட கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை. இது அனர்த்தத்தின் பாரதூரத் தன்மையைக் காட்டுகின்றது.

அதனால் தான் உலக சமூகம் இலங்கைக்கு உதவ முன் வந்திருக்கிறது முதலில் உதவ வந்தது இந்தியா. அதிகம் உதவியதும் இந்தியா. அதைத் தொடர்ந்து பெரும்பாலான அயல்நாடுகளும் உட்பட உலக சமூகம் தாராளமாக உதவி செய்து வருகிறது.

அனர்த்த காலம் இலங்கை மீதான அனுதாபத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. இந்த அனுதாபம் ஒரு விதத்தில் அனுர அரசாங்கத்தைப் பலப்படுத்தக் கூடியது. அரசாங்கம் அறிவித்திருக்கும் இழப்பீடுகளின் பருமன் அது மக்களுடைய நம்பிக்கையை வெல்வதற்கு முயற்சிக்கிறது என்பதைக் காட்டுகின்றது. இதற்கு முன்பு ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் போது முன்னிருந்த அரசாங்கங்கள் அறிவித்திராத பெருந்தொகை இழப்பீட்டுத் தொகையை அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதன் மூலம் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான அபிமானத்தைக் கட்டியெழுப்ப முடியும். இது வெறும் வாக்குறுதி தான் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. நடைமுறையில் அரசாங்கம் எவ்வளவு தொகையைக் கொடுக்கப் போகிறது என்பதனைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். ஆனாலும் அறிவிக்கப்பட்டிருக்கும் இழப்பீட்டுத் தொகை ஒப்பீட்டளவில் பெரியது.

மேலும் சிதைந்த நகரங்களையும் வாழ்வையும் மீளக்கட்டியெழுப்பும் முயற்சியில் அரச நிறுவனங்களோடு பொது மக்களும் தன்னார்வமாக இணைந்து வருகிறார்கள். பாதிக்கப்படாத பகுதியைச் சேர்ந்த மக்கள், அல்லது ஒப்பீட்டளவில் அதிகம் பாதிக்கப்படாத பகுதியைச் சேர்ந்தவர்கள், தாங்களாகத் திரண்டு தன்னார்வமாக முன்வந்து, ஏனைய பகுதிகளுக்கு உதவுகிறார்கள். மண் சரிவில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகளில் உதவுகிறார்கள். சேறு படிந்த தெருக்களை, வீடுகளைக் கழுவிச் சுத்தமாக்குகிறார்கள். பொது மக்கள் மத்தியில் இருந்து நிவாரணங்களைத் திரட்டி பாதிக்கப்பட்ட மக்களை நோக்கிக் கொண்டு போகிறார்கள். இந்த மனிதாபிமானத் தன்னார்வச் சூழல் அரசாங்கத்துக்கு அனுகூலமானது.

குறிப்பாக வடக்கிலிருந்து தமிழ் அரசியல்வாதிகளும் தன்னார்வலர்களும் மலையகத்தை நோக்கி உதவிகளோடு போகிறார்கள். புயல் ஓய்ந்த கையோடு தனித்து விடப்பட்ட அல்லது துண்டிக்கப்பட்ட முல்லைத்தீவை நோக்கி யாழ்ப்பாணத்தில் இருந்து தன்னார்வலர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் போனார்கள். தங்களால் இயன்ற நிவாரணங்களைக் கொடுத்தார்கள். உதவிகளைச் செய்தார்கள்.

இப்பொழுது மலையகத்தை நோக்கிப் போகிறார்கள். அனர்த்த காலம் தமிழ் மக்களுக்கு இடையிலான சகோதரத்துவத்தை உணர்வுபூர்வமாகப் பலப்படுத்தியிருக்கிறது – அது மட்டுமல்ல அனுர அரசாங்கத்தையும் அது பலப் படுத்தக்கூடிய வாய்ப்புகள் தான் அதிகமாகத் தெரிகின்றன.

– நிலாந்தன்

# இலங்கைத் தீவுக்குள் புயல் நிவாரணத்துடன் மெல்ல நுழையும் அமெரிக்கா விமானங்கள்!

இலங்கைத்தீவுக்குள் மெல்ல நுழையும் இலங்கை அரசியல் மேடையில் பெரும்பாலான நாடுகள் தம் சொந்த நலன்களை முன்னிறுத்தி நகரும் நிலையில் மிகச் சுருக்கமாகவும் மிகச் சிக்கலாகவும் செயல்படும் சக்தி அமெரிக்கா ஆகும். அது ஒரு காலத்தில் வெளிப்படையான தூதரக நடைமுறைகள் வழியாக மட்டுமே ஈடுபட்டிருந்தாலும், அண்மைக காலங்களில் மெல்ல நுழையும் திறமையான நுட்பம் மூலம் இலங்கையின் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய துறைகளுடன் நெருக்கமாக இணைந்து வருகிறது.

1.அரசியல் இடைவெளிகளைப் பயன்படுத்தும் பெரிய சக்தி:-

இலங்கையின் உள் அரசியல் பலவீனங்களும் கட்சி மாற்றங்களும், நிலைத்தன்மையின்மையும் உலக பெரிய சக்திகளின் ஈடுபாடுகளுக்கு வாய்ப்பளிக்கின்றன. இந்த சூழலில் அமெரிக்கா தன்னுடைய ஆதிக்கத்தை அரசியல் கூட்டணிகள் தூதரகப் பேச்சுவார்த்தைகள், ஜனநாயகக் கொள்கைகளுக்கான ஆதரவு மற்றும் மனித உரிமை அழுத்தங்கள் மூலம் விரிவுபடுத்துகிறது.

இந்த அணுகுமுறை அமெரிக்கா நேரடியாகச் செயற்படவில்லை என்றாலும், அதன் கொள்கைகள் இலங்கை அரசியல் முடிவுகளைத் தீண்டும் என்பதற்கான தெளிவான அடையாளமாக கருதப்படுகிறது.

2. பொருளாதாரத் துறையில் மெல்லிய ஆட்சி:-

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கிய காலத்தில் அமெரிக்கா தன்னுடைய நிதி அமைப்புகள், சர்வதேச நிதி நிறுவனங்கள் (IMF,World Bank போன்றவை) வழியே இலங்கைத்தீவின் கொள்கை வடிவமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது.

இவை இலங்கைக்கு உதவியாக இருந்தாலும், அவை சேர்த்து கொண்டு வரும் நிபந்தனைகள் நாடு திரும்ப வேண்டிய பொருளாதாரப் பாதையை நிர்ணயிக்கும் சக்தியாகத் திகழ்கின்றன.

அதாவது உதவிக்கான மறைந்த மொழியில் புதிய கொள்கைகளை ஏற்க வேண்டும் என்ற செய்தி மறைந்து காணப்படும்.

3. பாதுகாப்பு தளங்களில் நுழையும் புதிய கவனம்:-

அமெரிக்காவின் கவனம் வெறும் பொருளாதாரத்தையும் அரசியலையும் தாண்டி இந்தியப் பெருங்கடல் புவியியல் பாதுகாப்பிற்கு விரியத் தொடங்கியுள்ளது.

இலங்கை அமைந்துள்ள இடம் உலக வர்த்தக வழிகளின் இதயமாகும் அதனால் அமெரிக்கா தீவின் கடற் பாதுகாப்பு, தகவல் நுட்பம், கடல் கண்காணிப்பு, பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றில் தன்னிச்சையாக ஈடுபடுகிறது. இதுவே இலங்கைக்கு ஆதரவாகும் பாதுகாப்பு நடவடிக்கை? அல்லது அமெரிக்காவின் ஆசிய பசிபிக் மூலோபாயத்தின் ஒரு துணைப்பகுதியா என்ற கேள்வி உள் மண்டலங்களில் எழுகிற

4. சீனத் தாக்கத்தை சமநிலைப்படுத்தும் உள்கருத்தும் உண்டு. இலங்கையில் சீன முதலீடுகள் அதிகரித்த பின்பு, அமெரிக்கா அதனை சமநிலைப்படுத்த மென்மையான அதிகாரம் (Soft Power) மற்றும் கட்டமைப்பு உதவிகள் போன்ற வழிகளில் தீவுக்குள் ஊடுருவுகிறது.

அதாவது சீனாவின் கடன் அரசியலுக்கும், துறைமுகக் கட்டுப்பாட்டுக்கும் எதிர்மறையான மாற்றாக அமெரிக்கா தன்னை வெளிப்படுத்துகிறது.

5. மக்கள் மனங்களில் சாதிக்கும் நுட்ப அணுகுமுறை

அமெரிக்காவின் கல்வி உதவித்திட்டங்கள், சமூக வளர்ச்சி ஆதரவுகள், இளைஞர்களுக்கான வாய்ப்புகள்,



குடிமை அமைப்புகளுடன் இணைபடு முயற்சிகள். இவை எல்லாம் மெல்ல நுழையும் தாக்கத்தின் அடித்தளம். ஆழமான சமூகத் தளங்களைத் தொடும் நவீன அரசியல் நயம்.

6. இலங்கைக்கான நன்மையா? ஆபத்தா என்று நோக்கினால் இத்தகைய நுழைவு இரு முகத்தன்மை உடையது. ஒன்று அரசியல் வெளிப்படைத் தன்மைக்கு வழிவகுக்கும் அழுத்தம் பாதுகாப்பு துறையின் மேம்பாடு பொருளாதார சீர்திருத்தங்களுக்கான வழிகாட்டுதல் கல்வி, தொழில் துறைகளில் புதிய வாய்ப்புகள் உண்டு.

ஆனால் தேசிய கொள்கைத் தீர்மானங்களில் வெளி சக்தியின் முன்னிலை மற்றும் சீன—அமெரிக்க போட்டி இலங்கையை அதற்குள் இழுக்கும் அபாயம் பொருளாதார நிபந்தனைகளால் சுயாட்சி மீது தாக்கம் தேசிய பாதுகாப்பு இரகசியங்கள் வெளிப்படும் சாத்தியம் போன்ற ஆபத்துக்கள் நிறையவே உண்டு.

இலங்கை இன்று உலக சக்திகளின் போட்டிப் பரப்பாக மாறியுள்ளது. அந்தப் பரப்பில் அமெரிக்கா திடுக்கிடும் வேகத்தில் அல்ல, மெல்ல நுட்பமாகவும் திட்டமிட்டபடியும் தன்னுடைய பாதையைக் குறிக்கிறது.

இந்த நுழைவு நல்லதா கெட்டதா என்று சொல்லும் முன் இலங்கை அரசு சந்தர்ப்பத்தையும் சுயாட்சியையும் சமநிலைப்படுத்தும் அறிவுக் கையெழுத்தை தன் அரசியல் பாதையில் அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இலங்கை உலக அரசியலின் சதுரங்க பலகையில் தன் சொந்த திசையுடன் நகரும் தேசமாக வளர வேண்டும்.

இதேவேளை டித்வா புயலால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலையை சமாளிக்க அமெரிக்காவின் அதிவேக மனிதாபிமான உதவி 07 டிசம்பர் 2025 ஞாயிற்றுக் கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அனர்த்தகால மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் வீர தீரமான பணியினை மேற் கொள்கிறார்கள் எனத் தெரிவித்த தூதுவர் சங், சில கடுமையான பணிகளை மேற்கொள்வதற்காக அமெரிக்கா இங்கே வந்துள்ளது. அமெரிக்க வான் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் பலத்தினைப் பயன்படுத்தி மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அத்தியாவசியமான பொருட்களை வழங்குவதன் மூலம், முன்னணியில் பணி புரியும் அணிகள் போக்குவரத்தின் மீது கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, மக்கள் மீது கவனம் செலுத்துவதற்கு உதவி செய்ய முடியும். இந்த சவாலான நேரத்தில் அமெரிக்கா இலங்கையுடன் அசைக்க முடியாத உறுதியுடன் நிற்கிறது. மீட்பு மற்றும் மீள்கட்டமைப்பு முயற்சிகளுக்கு உதவி செய்வதில் உறுதியாக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தூதரகத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியும், பாதுகாப்பு இராஜதந்திர அதிகாரியுமான மெத்திவ் ஹவ்ஸ், வீதிகள் சேதமடைந்து வீதிப் போக்குவரத்து தடைப்பட்டும். நேரம் குறைவாகவும் இருக்கும்போது, போக்குவரத்து ஏற்பாட்டியல் வசதிகள் உயிர்நாடியாகின்றன எனக் குறிப்பிட்டார்.
மிக முக்கியமான உதவிகளின் உயிர்நாடியை தொடர்ந்தும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக வான் போக்குவரத்துத் திறன் மற்றும் ஒருங்கிணை




ப்பு ஆகியவற்றுடன் அமெரிக்கா இங்கே வருகை தந்துள்ளது.

C-130J Super Hercules என்பது கடினமாகப் பணியாற்றும் நம்பகமான ஒரு விமானமாகும். அது போக்குவரத்து வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அத்தியாவசியமான சரக்குகளை விரைவாகவும் நம்பகத்தன்மையுடனும் நகர்த்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

இலங்கை ஆயுதப் படைகளுடன் நாம் மேற்கொள்ளும் எமது வழமையான கூட்டுப்பயிற்சிகள் வலுவான உறவுகளை உருவாக்கி, டித்வா சூறாவளி போன்ற நெருக்கடிகளின் போது ஒன்றிணைந்து பணியாற்றும் எமது திறனை மேம்படுத்தியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசு விடுத்த ஒரு கோரிக்கையினைத் தொடர்ந்து இலங்கை ஆயுதப் படைகளுடனான ஒத்துழைப்புடன் அமெரிக்க இந்தோ-பசிபிக் கட்டளைப்பீடமானது (INDO PACOM) டித்வா சூறாவளி அனர்த்தத்திற்கான இலங்கையின் பதிலளிப்பு நடவடிக்கைகளுக்கான வான் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் உதவியினை வழங்குவதற்காக அமெரிக்க இராணுவ விமானத்தையும் அதிகாரிகளையும் அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை அதிகாரிகள் தேவைகளை மதிப்பிட்டு முன்னுரிமைகளை நிர்ணயிக்கும் போது, கட்டுநாயக்க விமான நிலையத் தளத்திலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு தேவையான பொருட்கள், பாதுகாப்பான குடிநீர், சுகாதார மற்றும் தூய்மை உதவிகள், உணவு உதவிகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்கள் போன்ற அவசரகால நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் இலங்கை தலைமையிலான வான் போக்குவரத்துப் பணிகளில் இலங்கை விமானப்படையுடன் இணைந்து அமெரிக்க விமானம் உதவி செய்யும்.

டித்வா சூறாவளி அனர்த்தத்திற்கான இலங்கையின் சமாளிப்பு நடவடிக்கைகளுக்கு நேரடியாக உதவி செய்யும், ஏற்கனவே செயற்பாட்டு ரீதியிலான பயன்பாட்டில் உள்ள திறன்களை உள்ளடக்கிய, அண்ணளவாக 2.1 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 640 மில்லியன் ரூபா) பெறுமதியான மிக முக்கியமான வான் போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் வசதிகளை வழங்கும் உபகரணங்களை உள்ளடக்கிய ஒரு பொதியினையும் அண்மையில் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியது.

அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பினூடாக வழங்கப்பட்ட இப்பொதியானது எரிபொருள் ட்ரக் வண்டிகள், நிலைத்தன்மை பாகங்களைக் கொண்ட கவைகோல் பளுவேற்றிகள், பேரொளி விளக்குகள், நிலைத்தன்மை பாகங்களைக் கொண்ட தரை மின் இயந்திரங்கள் மற்றும் காவிச்செல்லக் கூடிய சரக்கு ஏற்றும் மேடைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இரவிலோ அல்லது பகலிலோ நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல், ஏற்றுதல் மற்றும் நகர்த்துதல் ஆகியவற்றை விரைவாக மேற்கொள்வதற்கான இலங்கை விமானப்படையின் திறனை அது பலப்படுத்துவதனால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவிகள் விரைவாகவும் பெரிய அளவிலும் சென்றடையும்.

டித்வா சூறாவளி கரையைக் கடந்து 72 மணி நேரத்திற்குள் பேரனர்த்த மீட்பு முயற்சிகளுக்கு உதவி செய்வதற்காக 2 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்தது. இது அமெரிக்க மக்களின் நல்லெண்ணத்தையும் இலங்கையுடனான எமது நீண்டகால பங்காண்மையினையும் பிரதிபலிக்கிறது.

நம்பகமான நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களூடாக, சூ றாவளியினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அவசரகால தங்குமிட வசதிகள், தண்ணீர், சுகாதார மற்றும் துப்புரவு சேவைகளை வழங்குவதற்கு இந்த உதவி துணைசெய்யும்.

# மாவீரர் நாள் - புயல் - கொலை

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



டித்வா புயல் மாவீரர் நாளுக்குப் பின்னரான உரையாடலின் மீதான கவனத்தைத் திசை திருப்பி விட்டது. அரசாங்கம் இம்முறை மாவீரர் நாளை பெரிய அளவில் உத்தியோகபூர்வமாகத் தடுக்கவில்லை. அதனால் மாவீரர் நாள் தாயகத்தில் பரவலாகவும் செறிவாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. எல்லாத் துயிலும் இல்லங்களுக்கும் இப்பொழுது ஏற்பாட்டுக் குழுக்கள் உண்டு. மேலும் இம்முறை உள்ளூராட்சி சபைகளும் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதில் அதிகம் ஆர்வம் காட்டின. புதிய உள்ளூராட்சி சபைகள் இயங்கத் தொடங்கி கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகின்றன. இம்முறை மாவீரர் நாளை அனுஷ்டிப்பதில் உள்ளூராட்சி சபைகள் கணிசமான அளவுக்குப் பங்களிப்பை நல்கின.மாவீரர் நாளையொட்டி நகரங்களை அலங்கரிப்பது தெருக்களை அலங்கரிப்பது முதலாக பல்வேறு விடயங்களிலும் உள்ளூராட்சி சபைகள் ஆர்வம் காட்டின.



மழை வெள்ளம் புயல் எச்சரிக்கை. எனினும் மக்கள் பரவலாக துயிலும் இல்லங்களை நோக்கி வந்தார்கள். பெரும்பாலான துயிலும் இல்லங்களில் மக்கள் குடைகளைப் பிடித்தபடி அஞ்சலி செய்தார்கள். மழை சற்றுக் கடுமையாக இருந்த இடங்களில் சுடருக்குக் குடை பிடித்து அதைப் பாதுகாத்துக் கொண்டு நனைந்தபடி நின்றார்கள். குறிப்பாக ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தில் சுடர் அணையக் கூடாது என்பதற்காக தமது தலைக் கவசத்தை சுடருக்கு மேல் பிடித்து சுடரைப் பாதுகாத்ததாக ஒருவர் முகநூலில் எழுதியிருந்தார்.

இவ்வாறு பரவலாகவும் செறிவாகவும் பெருமடுப்பிலும் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டிருந்த ஒரு பின்னணிக்குள் அது தொடர்பான உரையாடல்களின் மீதான கவனக் குவிப்பை புயல் திசை திருப்பியது. மாவீரர் நாளுக்காக அலங்கரிக்கப்பட்ட சிவப்பு மஞ்சள் கொடிகள் நனைந்து தொங்கிய தெருக்களைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்ந்தது. மாவீரர் நாளுக்காக கட்டப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகள் கழட்டப்படுவதற்கு முன்னரே புயல் நாட்டுக்குள் வந்து விட்டது. புயலின் அகோரம் காரணமாக ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் கவனக்குவிப்பு மாவீரர் நாளில் இருந்து புயலை நோக்கித் திரும்பியது.

புயல் வடக்கு கிழக்கில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு உயிரிழப்புகளைத்தான் ஏற்படுத்தியது. அதிக உயிரிழப்பு தெற்கில் தான். வடக்கு கிழக்கில் உட்கட்டுமானங்கள் சிதைவடைந்தன. மக்கள் இடம் பெயர்ந்தார்கள். அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டம் துண்டிக்கப்பட்டது. மன்னாரில் ஆயிரக் கணக்கில் மாடுகள் இறந்தன. எனினும் வடக்கில் உயிரிழப்பு என்று பார்த்தால் மொத்தம் நான்கு பேர்தான். ஒருவர் தெற்கு நோக்கி பேருந்தில் சென்ற போது பேருந்து வெள்ளத்தில் சிக்கியதால் உயிரிழந்தவர். மற்றவர் கடற்தொழிலாளி. ஏனைய இருவரும் வவுனியாவிலிருந்து அவர்கள் பயணம் செய்த வாகனம் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தார்கள்.

ஒருபுறம் புயலால் பாதிக்கப்பட்டவர்களை நோக்கி எதிர்பாராத திசைகளில் இருந்து மனிதாபிமான உதவிகள் கிடைத்தன. இன்னொரு புறம் வணிகர்களில் ஒரு பகுதியினர் மனிதாபிமானமாக நடந்து கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டவர்களை நோக்கிப் பல்வேறு தரப்புகளும் உதவிக்கரம் நீட்டின. உள்ளூர் தொண்டு நிறுவனங்கள், மத நிறுவனங்கள், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் போன்ற பல்வேறு வகைப்பட்டவர்களும் உதவிகளைச் செய்தனர்.நாடுகளைப் பொறுத்தவரை முதலில் உதவியது இந்தியா. அதன் பின் அமெரிக்கா, பாகிஸ்தான், மாலைதீவுகள், சீனா உட்பட பெரும்பாலான நாடுகள் உதவி புரிந்தன.

ஆனால் உள்ளூரில் வணிகர்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்கினார்கள். மரக்கறி முட்டை போன்றவற்றின் விலைகளை உயர்த்தினார்கள். புயலுக்கு அடுத்தடுத்த நாட்களில் யாழ்ப்பாண நகரத்தின் பெரும்பாலான சிலிண்டர் கடைகளில் மக்கள் நிறைந்து காணப்பட்டார்கள். திடீரென்று சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு வந்து விட்டது. பாதைகள் அடைபட்ட காரணத்தால் சிலிண்டர்கள் வரவில்லை என்று ஒரு விளக்கம் சொல்லப்பட்டது. அது உண்மையல்ல. ஒவ்வொரு நாளும் தென்னிலங்கையில் இருந்து வரும் சிலிண்டர்களைத் தான் கடைகளில் வைத்து விற்கிறார்கள் என்பது உண்மையல்ல.அவர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு தேவையான குறிப்பிட்ட தொகை சிலிண்டர்களைச் சேமித்து வைத்திருப்பார்கள். அதுதான் வியாபார வழமை.பாதைகள் அடைபட்டதைச் சாட்டாக வைத்து அவர்கள் செயற்கையாக ஒரு தட்டுப்பாட்டை உருவாக்கினார்களா?



சிலிண்டர்களுக்கு நிர்ணய விலை உண்டு. விலை கூட்டி விற்க முடியாது. ஆனால் மரக்கறிகளுக்கு அப்படியல்ல. மரக்கறிகளை விரும்பின விலைக்கு விற்றார்கள். கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகமான விலைகள். பச்சை மிளகாயில் இருந்து இஞ்சி வரை. விலை சடுதியாக உயர்ந்தது. வெள்ளம் வடிந்த பின்னரும், புயல் ஓய்ந்த பின்னரும், மரக்கறிகளின் விலை குறையவில்லை. ஒரு பகுதி மரக்கறி வியாபாரிகளின் இதயம் இளகவில்லை.

மரக்கறிகள் மட்டுமல்ல முட்டை, கோழி இறைச்சி போன்ற பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.பெரும்பாலான இறைச்சிக் கடைகளில் பேரண்ட்ஸ் வகை இறைச்சிக் கோழிகள் கிடைக்கவில்லை. ஏன் என்று கேட்டபோது தெற்கில் இருந்து தான் அவை வருகின்றன. பாதைகள் அடைபட்டதால் அவை வரவில்லை என்று சொன்னார்கள். புயலுக்கு முன் முட்டையின் விலை 30 ரூபாய். புயலோடு முட்டை விலை 36 ரூபாய். ஏனென்றால் முட்டை ஒவ்வொரு நாளும் வவுனியாவுக்கு அப்பாலிருந்து வருகிறது என்று சொன்னார்கள். ஒரு முட்டை வியாபாரி தெற்கில் தனக்கு வழமையாக முட்டை சப்ளை செய்யும் மொத்த வியாபாரி அனுப்பிய வாட்சப் ஒளிப்படம் ஒன்றைக் காட்டினார். அதில் கோழிப் பண்ணையில் இருந்த கோழிகள் புயலில் அடிபட்டுச் செத்துக் கிடந்தன.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுகிறது. புயல் வந்து, வெள்ளம் பெருகி பாதைகள் தடைபட்டதும் மரக்கறிகளின் விலை, முட்டை விலை உயர்ந்து விட்டது. சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு. பேரண்ட்ஸ் வகைக் கோழிகள் கிடைக்கவில்லை. அப்படியென்றால் வடக்கின் பொருளாதாரம் மேற்கண்ட பொருட்களுக்காக தெற்கில் தங்கியிருக்கின்றதா? வடக்கிலிருந்து தெற்குக்கான பாதைகள் அடைபட்டால் யாழ்ப்பாணத்தவர்களுக்கு முட்டை, பச்சை மிளகாய், பேரண்ட்ஸ் கோழி இறைச்சி போன்றவை கிடைக்காதா?



புயல் எழுப்பிய கேள்விகளில் இது முக்கியமானது. மற்றொரு கேள்வி தொலைத் தொடர்பு தொடர்பானது.தமிழ் மக்களில் அதிகமானவர்கள் குறிப்பாக கிராமப் பகுதி மக்கள் அதிகமாக பயன்படுத்துவது டயலக் தொலைபேசி அட்டைகளைத் தான். ஆனால் புயலின் போதும் புயலுக்குப் பின்னரும் டயலக் சிம்கள் பெரும்பாலும் வேலை செய்யவில்லை. அந்த சிம்களை பயன்படுத்திய பலர் தொடர்புகளை இழந்து தவித்தார்கள். அனர்த்த காலங்களில் தொலைத் தொடர்பும் ஓர் அத்தியாவசிய சேவை தான். தொலைதொடர்பு இல்லையென்றால் ஆபத்தில் இருப்பவர்கள் தனித்து விடப்படுவார்கள். இது கடந்த புயல் நாட்களில் நடந்தது. அது இயற்கை அனர்த்தம் மட்டுமல்ல தொலைத் தொடர்பு அனர்த்தமும் கூட.


டயலக் கொம்பனி உட்பட பெரும்பாலான தொலைத்தொடர்புக் கொம்பெனிகள் சாதாரண மக்களிடம் வெவ்வேறு காரணங்களைச் சொல்லி பணத்தை வசூலிக்கின்றன இந்த குற்றச்சாட்டு பரவலாக உண்டு. சிம்மை விற்கும் பொழுது அல்லது சேவையை தொடங்கும் பொழுது நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்தி அதன் மூலமே அப்பாவி மக்களிடமிருந்து சிறுகச் சிறுக பணத்தைச் சுரண்டுகிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக உண்டு. கேள்வி கேட்காத அப்பாவியான ஒரு வாடிக்கையாளரிடம் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு ரூபாயை சுரண்டினால் கூட லட்சக்கணக்கானவரிடம் இருந்து ஒரு நாளைக்கு லட்சக்கணக்கான ரூபாய்களைச் சுரண்ட முடியும். இவ்வாறு ஏற்கனவே குற்றச் சாட்டுகளுக்கும் விமர்சனங்களுக்கும் இலக்காகியிருந்த தொலைதொடர்புக் கொம்பனிகள் குறிப்பாக டயலாக் கொம்பனி இம்முறை புயலோடு அதன் நம்பகத் தன்மையை இழந்துவிட்டது.

இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் டயலக் தொலைத்தொடர்பு சீராகவில்லை. பலருடைய டயலாக் இன்டர்நெட் இணைப்பு மோசமாக இருக்கிறது. உயிரிழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் இவ்வாறு தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கூறமுடியும்.டயலக் கொம்பனி அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். மக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

புயல் தணிந்த காலையில் யாழ்ப்பாணத்தவர்கள் பொருட்களை வாங்க தெருக்களில் தயங்கித் தயங்கி இறங்கிய வேளையில், திருநெல்வேலியில் ஒரு கொலை நடந்தது. கொலைக்கு காரணம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அநேகமானவர்கள் இளவயதினர். சம்பவம் நடந்தது அதிகம் சனப்புழக்கமுள்ள ஓரிடம்.


திருநெல்வேலி சந்தைக்கு அருகே ஆடியபாதம் வீதி. ஒரு நபரை மூன்று பேர் துரத்தி துரத்தி வெட்டுகிறார்கள். அப்பகுதியில் நின்றவர்கள் அதில் சம்பந்தப்படாமல் விலகி விலகி நிற்கிறார்கள். யாருமே கொல்லப்பட்டவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கவில்லை. அங்கு கிடைத்த சிசிடிவி கமரா பதிவுகளின்படி அங்கு நின்ற அனைவருமே பார்வையாளர்களாக நின்றார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் அதைத் தடுக்கும் (22ம் பக்கம் பார்க்க)


Ring of Fire-இல் இருந்து தயாரிக்கப்பட்ட
உயிர் காக்கும் தொழில் நுட்பம்
வடக்கு ஒன்ராறியோவில் மருத்துவ சாதனங்கள் போன்ற அத்தியாவசிய தொழில்நுட்பங்களை உருவாக்க தேவையான முக்கிய கனிமங்கள் நிறைந்த ஒரு பகுதி உள்ளது.
PROTECT ONTARIO
இது பற்றி மேலும் அறிந்துகொள்ள: ontario.ca/RingOfFire
இது ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.
Ontario

# பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கம்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- க. அருந்தவபாலன் -



இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றின் 06 டிசம்பர் 2025 சனிக்கிழமை இடைக்கால உத்தரவையடுத்து மீண்டும் இது பேசுபொருளாகியுள்ளது. அது தொடர்பாக அவ்விடத்தில் விளையாட்டரங்கத்தை அமைப்பதற்கு முயற்சி எடுத்தவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் (பெரும்பாலானவர்கள் NPP உறுப்பினர்களும் ஆதரவாளர்களும்) அதனை எதிர்ப்போரை நோக்கி முன்வைக்கும் கருத்துக்கள் அல்லது குற்றச்சாட்டுகள்,

1. அரசியல் நோக்கங் கொண்டது

2. அநியாயமாக அதற்குரிய நிதியைத் திருப்புகிறார்கள்.

3. அவ்விடத்தில் முன்னர் இவ்வாறு நிகழும்போது என்ன செய்தீர்கள்?

4. சுமந்திரன் மீதான வசைபாடல்

இவ்விடயத்தில் எவ்வகையான அரசியல் நோக்கங்களும் கிடையாது. சில வேளை அதை ஆதரிப்பவர்களுக்கு அந்நோக்கம் இருந்தாலும் கூட எதிர்ப்பவர்களின் நோக்கங்கள் சுற்றாடல் மரபுரிமை,பண்பாடு, வரலாறு போன்றனவே. உள்ளக விளையாட்டரங்கத்தை யாரும் எதிர்க்கவில்லை. அதை எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆனால் அதனை பொருத்தமான வேறொரு இடத்தில் அமைக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

அது மட்டுமல்ல இவ்வாறான அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலமோ அல்லது அவற்றுக்கான நியாயமான எதிர்ப்பைப் பிழையாகச் சித்தரிப்பதன் மூலமோ அரசியல் ஆதரவை வளர்க்கலாம் என்று கருதினால் அது தவறான முடிவையே தரும். அதே போல வடக்கு கிழக்கில் அரசாங்கத்தின் பொருத்தமான விருத்தி நடவடிக்கைகளை அரசியல் நோக்கங்கொண்டு எதிர்ப்பவர்களுக்கும் அதே போன்ற முடிவுதான்.

திட்டத்துக்கான இடத்தை மாற்ற வேண்டிய தேவை ஏற்படும்போது அந்நிதி கட்டாயம் திரும்பும் எனக்கூற முடியாது. சில மாற்று ஏற்பாடுகளின் மூலம் அதனைத் திரும்பப் பயன்படுத்த முடியும். அவ்வாறில்லை அந்நிதி திரும்புமானால் அவசரப்பட்டு ஆராயாமல் களத்தில் இறங்கியவர்களே அதற்குப் பொறுப்புக் கூறவேண்டும். அதற்கான நிவாரணத்தையும் அவர்களே காணவேண்டும். அது மட்டுமன்றி தவறான ஒன்றைச் செய்வதை விட அதைச் செய்யாமல் இருப்பது மேல். அவ்விடத்தில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களுக்கும் இது போலவே முன்னர் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன. அவ்வெதிர்ப்புகள் பெரும்பாலும் தற்போதுள்ளது போலவே கவனத்திற் கொள்ளப்படவில்லை.

சில தவிர்க்கப்பட்டுமுள்ளன( முன்னாள் அரச அதிபர் சிவபாலசுந்தரன் அம்பலவாணரது தகவல் செய்தியாக 24ம் பக்கத்தில் உள்ளது. Sivapalasundran Ampalavanar அவர்களது முகநூல் பதிவையும் பார்க்கவும்) முக்கியமாக அவ்வாறான தொடர் எதிர்ப்புகளின் காரணமாகவே முன்னாள் அரச அதிபர் வேதநாயகன் அப்பூங்காவின் எஞ்சிய பகுதியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதில்லை என்ற பொதுத் தீர்மானத்தையும் எடுந்திருந்தார். தற்போது ஆளுனராக இருந்து தன்னுடைய தீர்மானத்தை தானே மேவி அனுமதித்தமையும் அத்தீர்மானத்தைத் தற்போதைய அரச அதிபர் புறந்தள்ளியமையும் தான் ஆளுந்தரப்பின் அரசியலும் அதிகாரமும் எவ்வாறுள்ளது என்பதைக் காட்டுமென்பதைக் குற்றஞ்சாட்டுவோர் புரிந்து கொள்ளவேண்டும்.



இவ்விடயம் தொடர்பான வழக்கில் சுமந்திரன் தோன்றி இடைக்காலத் தடையைப் பெற்றதைக் காட்டி அவர் மீது வசைபாடுவது கண்டனத்துக்குரியது. சுமந்திரன் மீது தமிழ் மக்களுக்கு ஆயிரம் விமர்சனங்கள் உண்டு. ஆனால் அவ்விமர்சனங்கள் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளுக்குத் துணை போபவர்களுக்கும் காவடி தூக்குபவர்களுக்கும் ஆதரவானவையல்ல. சுமந்திரனைப் பொறுத்த மட்டில் இந்த வழக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு எதிரான பல வழக்குகளில் தாமாக முன்வந்து இலவசமாக தோன்றி வருவதை தமிழ் மக்கள் நன்றியுடன் பார்க்கின்றனர். அந்த வகையில் இவ்விடயத்தில் மக்களின் ஆதரவு அவருக்கு எப்போதும் இருக்கும்.

உள்ளக விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டத்தையும் அதற்காக முயன்றோரையும் மக்கள் வரவேற்கிறார்கள் அதேவேளை அதில் ஏற்பட்ட தவறுகளை நியாயப் படுத்துவதற்காக மற்றவர்களை விமர்சனம் செய்வதைத் தவிர்த்து அவற்றைத் திருத்த முறபட வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## கூட்டணி அரசியலை மையமாகக் கொண்ட தமிழ்நாட்டுத் தேர்தல்கள்!

(21ம் பக்கத் தொடர்ச்சி) வெற்றிக்கு வழிவகுக்கும் என்று பாரதிய ஜனதா நம்பிக்கையுடன் இருக்கிறது. ' அண்ணா தி.மு.க. தான் தமிழ்நாட்டில் முதலாவது பெரிய கட்சி. இரண்டாவதாகவே தி.மு.க. இருக்கிறது. மூன்றாவது பெரிய கட்சி பாரதிய ஜனதா விளங்குகிறது. அதனால் முதலாவது கட்சியும் மூன்றாவது கட்சியும் சேரும்போது கூட்டணி மிகவும் பலம்பொருந்தியதாக இருக்கும். தமிழ்நாட்டில் பாரதிய ஜனதாவுக்கு இருக்கும் வாக்கு வங்கியை விடவும் குறைவான வாக்கு வங்கிகளையே தி.மு க. வின் சகல நேசக் கட்சிகளும் கொண்டிருக்கின்றன. அத்துடன் அரசாங்கத்தின் இதுவரையான செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தியும் இருக்கிறது' என்று நாராயணன் கூறுகிறார்.

அரசாங்கம் தொடர்பில் மக்களின் அதிருப்தியும் விஜயின் ஆதரவு அதிகரிப்பும் எதிர்க் கட்சிகளுக்கு அனுகூலமாக அமையலாம். ஆனால், எதிரணிக்கட்சிகள் பிளவுபட்டு நிற்பது தி.மு.க.வுக்கு பெருமளவுக்கு வாய்ப்பாக அமையவும் முடியும். (ரைம்ஸ் ஒவ் இந்தியா)

## அம்பிட்டிய தேரரை ஏன் கைது செய்யவில்லை?

(5ம் பக்கத் தொடர்ச்சி) இதன் பின்பு சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உள்ள சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த நிலையில் குறித்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபருக்கு கோப்புக்கள் அனுப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் குறித்த தேரரை கைது செய்யுமாறு அறிவுறத்தல் வழங்கியது.

இதன் தொடர்ச்சியாக குறித்த வழக்கு 08 டிசம்பர் 2025 மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது குறித்த தேரர் நீதிமன்றில் சமூகமளிக்காத நிலையில் வழக்கு தொடுநர் சார் பாக முன்னலையான சட்டத்தரணி சட்டமாஅதிபர் திணைக்களத்தின் அறிவுரையின்படி குறித்த தேரரை இதுவரை கைது செய்யப்படவில்லை என நீதவான் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

இதையடுத்து நீதவான் அடுத்த வழக்கு தவணை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த தேரரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறையினருக்கு உத்தரவிட்டதுடன் குறித்த தேரரை இதுவரை நீதிமன்றில் ஏன் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என மாவட்ட சிரேஷ்ட காவல்துறை அத்தியட்சகர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் கட்டளை பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## அனர்த்த முகாமைத்துவம் எதிர்க்கட்சிகளின்....

(19ம் பக்கத் தொடர்ச்சி) முடியாது என்பதும் இவர்களுக்கு தெரியாததல்ல. அப்படியானால் அவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்களா? இதற்கு பின்னால் உள்ள அரசியல் என்ன?

எது எப்படியோ, அரசாங்க, எதிர் தரப்புக்களுக்கு இன்று இருக்கின்ற பொறுப்பு இயற்கை அனர்த்த பாதிப்புக்களுடன், ஏற்கனவே சிக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்தும் நாட்டை மீட்பதற்கான நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டக் கூடிய பணிகளை முன்னெடுப்பதுதான். அரசாங்கம் நிவாரணங்களை இழப்பீடுகளை அறிவித்திருக்கிறது இது விடயமாகவும், மீள் கட்டமைப்பு தொடர்பாகவும், எண்ணற்ற கேள்விகள் உண்டு. யாரையும், யாரும் கேள்வி கேட்க வேண்டும் என்று ஜனாதிபதி முதுகில் தட்டிக் கொடுக்கிறார். ஆக, எதிர்க்கட்சிகள் அரசியல் நாகரிகத்துடன் கேள்விகளை, ஆலோசனைகளை, மாற்று சிந்தனைகளை முன் வைத்து நாட்டை கட்டியெழுப்ப முன்வர வேண்டும். இதை விடுத்து எந்த தரப்பாவது கட்சி அரசியல் விளையாட்டை காட்டினால் அதற்கு காலம் பதிலளிக்கும்.

ஒரே கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் குறித்து முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவது எதிர்க்கட்சிகளின் பலவீனத்தை வெளிக்காட்டுகிறது. இதனால் இந்த இடர்க்கால சூழலில் அரசாங்க, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது என்பது காலம் உங்களுக்கு இட்டுள்ள கட்டளை.

## இலங்கையைச் சென்றடையும் தாராளமான....

(4ம் பக்கத் தொடர்ச்சி) கட்டுநாயக்க விமான நிலையத்தை சென்றடைந்தது. நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வின் போது இலங்கைக்கான ரஷ்ய கூட்டமைப்பின் தூதர் லெவன் ஜாகார்யன், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலகா, பாதுகாப்பு துணை அமைச்சர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் லிமிடெட்டின் தலைவர் ஏர் வைஸ் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம முதலானோர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இணைந்திருந்தனர்.

இதேவேளை பதுளு ஓயா பெருக்கெடுத்ததால் வெள்ளத்தில் மூழ்கிய பதுளை ஓயா தோட்டம் கிராமத்தில் உள்ள வீடுகள் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. இந் நிலையில் எல்ல பகுதிக்கு வருகை தந்த சுவீடன், ஜெர்மனி, நோர்வே மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் இரண்டு நாட்களாக மக்களுடன் இணைந்து வீடு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட அனுபவங்கள்!

கட்டுரையாளர்:-
கனடாவில் இருந்து
- டி.பி.எஸ்.ஜெயராஜ் -

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையில் இன்று உள்ள ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) றோஹண விஜேவீர தாபித்த அதே ஜே.வி.பி. அல்ல. அது இனி மேலும் அரசியலில் தன்னெண்ணப்படி செயற்படக்கூடிய ஒரு கட்சியாக இல்லை. தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியின் பிரதான அங்கத்துவ கட்சியாக ஜே.வி.பி. இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் அங்கமாக தேர்தல்களில் போட்டியிட்ட போதிலும் அது முக்கியமான முடிவுகளை தானாகவே எடுத்து செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதி திசநாயக்க ஜே.வி.பி.யினதும் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினதும் தலைவராக இருக்கிறார்.

2024 செப்டெம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி அதையடுத்து இரு மாதங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்தின் 225 ஆசனங்களில் 159 ஆசனங்களைக் கைப்பற்றியது. 2025 மே மாதத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையான பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் மாநகரசபைகளில் முதலாவதாக வந்தது. மெச்சத்தக்க அந்த வெற்றிகளை பெற்ற போதிலும், பிரசாரம் என்பது சொற்ப கட்டான கவிதை என்பதையும் ஆட்சி முறை என்பது கடினமான உரைநடை என்பதையும் ஜே.வி.பி. அனுபவத்தின் ஊடாக கற்று வருகின்றது

இந்த அடிப்படையில் ஜே.வி.பி. பழையவற்றை மறப்பதும் புதியவற்றைக் கற்பதுமான ஒரு செயன்முறைக்கு உள்ளாகியிருக்கிறது. தேர்தல்களுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பலவற்றை அது கைவிட்டு விட்டது. கொள்கை அடிப்படையிலும் கூட அது மறுதலையாக திரும்பியிருக்கிறது. பொருளாதாரக் கொள்கையை பொறுத்தவரை, சர்வதேச நாணய நிதியத்துடன் ஜே.வி.பி. கொண்டிருக்கும் நட்பிணக்கமான புரிந்துணர்வும் வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவுடனான



நெருக்கமும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இனத்துவ உறவுகளை பொறுத்த வரையிலும் ஜே.வி.பி.யிடம் முக்கியமான இன்னொரு மாற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. அது சிங்கள சோசலிஸ்ட் 'என்ற தோற்றப்பாட்டைக் கைவிட்டு சிறுபான்மைச் சமூகங்களான இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழிர்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறது. இதன் விளைவாக ஜே.வி.பி. பெரும் பயனடைந்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஒரு கணிசமான எண்ணிக்கையில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்களை ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கொண்டிருக்கிறது. தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியில் ஜனாதிபதி திசநாயக்க பெருமளவுக்கு செல்வாக்கைக் கொண்டவராகவும் விளங்குகிறார்.

## மாற்றத்தின் சோதனைகள்

ஆனால் ஜே.வி.பி. தன்னை மாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றபோது மாற்றத்தின் சோதனைகளை எதிர்கொள்கின்றது. ஜே.வி.பி. தன்னை வித்தியாசமானதாக காண்பிக்க முயற்சிக்கின்ற



அதேவேளை, அதன் கடந்த காலம் சந்தேகத்துடன் நோக்கப்படுகின்றது. இதை ஜே.வி.பி.க்கும் இலங்கை தமிழர்களுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை மிகவும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. தேர்தல்களில் மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர, வடக்கு, கிழக்கின் தமிழர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாவட்டங்களில் ஜே.வி.பி. குறிப்பிடத்தக்க அளவில் வெற்றிகளை பெற்றிருக்கிறது. வடக்கில் கட்சியின் செயற்பாட்டை அதன் தலைவர்கள் தங்களது தேர்தல் வெற்றி என்ற மகுடத்தின் அணிகலன் என்று வர்ணிக்கிறார்கள். என்றாலும், இலங்கை தமிழர்கள் விடயத்தில் ஜே வி.பி. அதன் வெற்றிகளை வலுப்படுத்தி முன்னேற முடியாமல் இருக்கிறது. பாரம்பரிய தமிழ் தேசியவாத கட்சிகள் கடந்த காலத்தை நினைவுபடுத்துவதன் மூலமாக ஜே.வி.பி. தொடர்பில் தமிழர்கள் மத்தியில் அச்சத்தையும் சந்தேகத்தையும் மீண்டும் ஏற்படுத்துகின்றன. போரை ஆதரித்து ஊக்கப்படுத்தியதில் ஜே.வி.பி. வகித்த பாத்திரம், வடக்கு—கிழக்கு இணைப்பு, சுனாமி நிவாரணக் கட்டமைப்பு ஆகியவற்றை முறியடித்த செயல்கள் முக்கியமாக சுட்டிக் காட்டப்படுகின்றன.

கடந்த காலத்தை மறப்பதிலும் இலங்கை தமிழர்களுடன் புதிய எதிர்காலம் ஒன்றை அமைத்துக் கொள்வதிலும் ஜே.வி.பி. எதிர்நோக்கும் சிக்கலை அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு ஐக்கிய இராச்சியத்தில் அண்மையில் ஏற்பட்ட அனுபவம் தெளிவாக விளக்குகிறது. ரில்வின் ஐயா என்றும் லொக்கு ஐயா என்றும் அறியப்படும் ஜே.வி.பி.யின் பலம் பொருந்திய பொதுச் செயலாளர் கடந்த வாரம் பிரிட்டனுக்கு குறுகியகால விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இலங்கை தமிழர்களுடன் உறவுகளைச் சீர் செய்து கொண்டு பிரகாசமான சிறந்த ஒரு எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச் செல்வதில் ஜே.வி.பி. எதிர்நோக்கும் திரிசங்கு நிலையை லண்டனில் ரில்வினுக்கு நடந்தவை தெளிவாகக் காட்டுகின்றன.

## மூத்த தலைவர்

71 வயதான ரில்வின் ஜே.வி.பி.யின் மிகவும் மூத்த தலைவர்களில் ஒருவராவார். அவர் 1978 ஆம் ஆண்டில் கட்சியில் இணைந்தார். 1987 —89 கிளர்ச்சிக் காலத்தில் அவர் களுத்துறை மாவட்டத்தின் ஜே.வி.பி. தலைவராக இருந்தார். இலங்கை பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்படாமல் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய ஜே.வி.பி.யின் உயர்மட்டத் தலைவர்களில் ரில்வினும் ஒருவர். ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சிக்கு பின்னரான மீள் எழுச்சியில் 1995 ஆம் ஆண்டில் அவர் கட்சியின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். கடந்த 30 வருடங்களாக பொதுச் செயலாளராக இருந்து வரும் அவர் கட்சிக்குள் சகல வல்லமையும் பொருந்திய தலைவராக கருதப்படுகிறார்.

ஜே.வி.பியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் தலைவராக ஜனாதிபதி திசநாயக்க இருக்கிறார். நடைமுறையில் சமாந்தரமான அதிகார மையம் ஒன்று இருக்கிறது. அது ஜே.வி.பி.யின் நீண்டகால பொதுச்செயலாளர் ரில்வினைத் தவிர வேறுயாருமில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் பெருமளவுக்கு ஜே.வி.பி.யினால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பியின் அரசியற் குழுவும் 28 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய குழுவும் பத்தரமுல்ல, பெலவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் கிரமமாக கூடுகின்றன. ரில்வின் அரசியற் குழுவிலும் மத்திய குழுவிலும் மிகவும் செல்வாக்குடையவராக விளங்குகிறார். பெலவத்தையில் இருந்து ரில்வின் தான் இந்த அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று எதிர்க் கட்சிகளின் அரசியல்வாதிகள் அடிக்கடி கூறுவார்கள்.

## அல்பேர்ட்டன் உயர் பாடசாலை

ஜே.வி.பி.யின் லண்டன் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 36வது கார்த்திகை வீரர்கள் தின நாகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதற்காக ரில்வின் சில்வா ஐக்கிய இராச்சியத்துக்கு சென்றார். லண்டன் வெம்பிளியில் உள்ள அல்பேர்ட்டன் உயர் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நவம்பர் 24 ஞாயிற்றுக் கிழமை அந்த நிகழ்வு நடைபெற்றது. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகள் என்று பெரும் எண்ணிக்கையானோர் அங்கு கூடினர்.

முன்னைய நாட்களில், ஐக்கிய இராச்சியத்துக்கு விஜயம் செய்த இலங்கை அரசின் தலைவர்களுக்கும் முக்கிய அமைச்சர்களுக்கும் எதிராக புலம்பெயர்ந்த இலங்கை தமிழ்ச் சமூகத்தின் உறுப்பினர்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்திருக்கிறார்கள். இந்த நடைமுறை 2024 ஆம் ஆண்டில் திசநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்ற பிறகு இல்லாமல் போனது.

சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி நாளிந்த ஜயதிஸ்ஸ, நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார, பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் ஆகியோர் சில வாரங்களுக்கு முன்னர் லண்டன் சென்றிருந்தனர். அப்போது அவர்களுக்கு எதிராக எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இடம்பெறவில்லை.

இத்தகைய சூழ்நிலைகளில் ஜே.வி.பி.யின் நிகழ்வை ஒழுங்கு செய்தவர்கள் எந்த வகையான குழப்பமும் ஏற்படும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. அது தவிர அந்த நிகழ்வு ஜே.வி.பி.யின் ' மாவீரர்களை ' நினைவு கூருவதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் மாவீரர் தின நிகழ்வுகளில் மக்கள் இறந்த விடுதலை புலிகள் இயக்கப் போராளிகளை நினைவு கூருவதற்கு இருந்த கட்டுப்பாடுகளை ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீக்கியிருந்தது. அ

தனால் ஜே.வி.பி.யின் நினைவேந்தல் நிகழ்வில் புலிகளைச் சேர்ந்தவர்களோ அல்லது புலிகளுக்கு ஆதரவான சக்திகளோ குழப்பத்தை ஏற்படுத்துவார்கள் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. புலம்பெபயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள முக்கியமான எந்தவொரு அமைப்பும் ஜே.வி.பி.யின் நிகழ்வுக்கு எதிராகவோ அல்லது ரில்வின் சில்வாவுக்கு எதிராகவா அறிக்கை எதையும் வெளியிடவுமில்லை.

அதனால் அல்பேர்ட்டன் உயர் பாடசாலைக்கு வெளியே நூறுக்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடி துண்டுப்ப ிரசுரங்களை விநியோகித்து பதாகைகளையும் ஏந்திய வண்ணம் சுலோகங்களை எழுப்பி போது ஜே.வி.பி. நிகழ்வின்

(20ம் பக்கம் பார்க்க)

# அனர்த்த முகாமைத்துவம் எதிர்க்கட்சிகளின் பங்கு என்ன?

கட்டுரையாளர்:-
கனடாவில் இருந்து
- அழகு குணசீலன் -

எமது அரசியல் அமைப்பு, இலங்கை ஒரு ஜனநாயக சோஷலிசக்குடியரசு என்று கூறுகிறது. அங்கு அரச தலைவராக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருக்கிறார். அமைச்சரவைக்கும் அவரே தலைமை தாங்குகிறார். பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் தலைமை பிரதமரிடம் இருக்கிறது. பிரதமர் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவையில் ஒரு அமைச்சரவை உறுப்பினர். எதிர்கட்சி தலைவர் பதவி ஒரு ஜனநாயக பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் பிரதமர் பதவிக்கு சமமானது. அதற்கான அனைத்து உரிமைகளையும், பொறுப்புகளையும் அரசியல் அமைப்பும் மற்றும் பாராளுமன்ற நடைமுறைச் சட்டங்களும் வழங்குகின்றன.

ஒரு நாட்டின் அரசியல் சூழ்நிலையை பொறுத்து அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் தேசிய நலன் கருதி ஒன்றிணைந்தும், கொள்கை ரீதியான முரண்பாடுகளில் உடன்பாடில்லாத போது இயலுமானவரை விட்டுக் கொடுப்புகளுடன் ஒரு இணக்கத்தை கண்டும் அல்லது ஒன்றுக்கொன்று முரண்பட்டும் கூட்டாக செயற்பட முடியும். குறிப்பாக இலங்கையின் இன்றைய இயற்கை அனர்த்த அவசரகால சமூக, பொருளாதார, அரசியல் அசாதாரண சூழலில் இது சாதாரண சூழலிலும் முக்கியமானது. ஒட்டு மொத்தத்தில் நாட்டினதும், மக்களினதும் நலன் சார்ந்து இந்த ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகின்றது.

அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருப்பதனால் அல்லது பலமான அரசாங்கம் என்பதனாலும், பலவீனமான, ஒற்றுமையற்ற எதிர் கட்சி கட்டமைப்பை கட்சி அரசியல் நலன் சார்ந்து ஒதுக்கி விட்டு செயற்படுவது முறையற்றது. இது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு ஆபத்தானது மட்டும் அன்றி முரணானதுமாகும். அதேபோன்று தேசிய நலன் சார்ந்து இன்றுள்ள அசாதாரண இடர்க்காலத்தில் கட்சி அரசியல் கடந்து அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டிய கடமைப்பாடு எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு.

இலங்கையின் இன்றைய இயற்கை அனர்த்த நிலைமைகளின் களநிலை சரி, பிழைகளுக்கு அப்பால் பொறுப்பு கூறவேண்டிய கடமைப்பாடு நாட்டின் நிர்வாக கட்டமைப்பின் இயங்கு நிலை நிர்வாகமாக மையமாக இயந்திரமாகவுள்ள அரசாங்கத்திற்கு உரியது. அதேவேளை எதிர்க்கட்சியினர் ஜனநாயக பாராளுமன்றம் ஒன்றில் அவர்களுக்கு உரிய பொறுப்புக்களையும் புறம் தள்ளமுடியாது. மறுபக்கத்தில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் பொறுப்பை தட்டிக்கழிக்காது புரிந்துணர்வுடன் செயற்படவும் வேண்டும்.

இந்த வகையில் எதிர்கட்சிகளின் பொறுப்பும், கடமையும் எவை?

அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்காணித்தல். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்தல்.

அரசாங்க ஆலோசனைகளுக்கு மாற்றாக மாற்று கருத்துக்களையும், மாற்று அணுகுமுறைகளையும் முன்வைத்தல்.

நாட்டு மக்களில் சிறுபான்மையினரின் (எதிர்கட்சி ஆதரவாளர்கள்) விருப்பு, வெறுப்புக்களை பிரதிநிதித்துவம் செய்தல்.

மேற்கூறிய பொறுப்புக்களையும், கடமைகளையும் எதிர்கட்சியாக ஒரு ஜனநாயக பாராளுமன்றத்தில் செய்ய முடியாமல் போனால், அதாவது அரசாங்கம் பாராளுமன்ற பெரும்பான்மையை பயன்படுத்தி எதிர்கட்சிகளின் ஜனநாயக செயற்பாட்டிற்கு தடையாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தால், அதற்கு எதிராக ஜனநாயக வழிமுறையில் போராட்டங்களை செய்தல்.

அநேகமான நாடுகளில் எதிர்கட்சிகளின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப் படும் போது, எதிர்க்கட்சிகள் பலவீனமாக இருக்கும் போது இந்த பொறுப்பு காலப்போக்கில் இயல்பாகவே, ஓவியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில், மற்றும் துறைசார் மனித உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு, சிறுவர் — பெண்ணுரிமை, … …அமைப்புக்களின் கரங்களுக்கு மாற்றப்படுகிறது. இந்தப்பிரிவினருக்கும் கருத்து, எழுத்து சுதந்திர உரிமைகள் மறுக்கப்படும் போது மறைமுகமாக செயற்படும் இயக்கங்களுக்கும் (UNTER GROUND MOVEMENTS) அதன் பின்னணியிலான அரசாங்க எதிர்ப்பு பேரணிகளுக்கும் வாய்ப்பாக அமைகிறது.



உறவினர் ஆட்சியே பொறுப்பு என்று 400 கோப்புக்களுடன் பாராளுமன்றத்தில் தோன்றியவர். இதற்கு முறைமை மாற்றமே ஒரேவழி என்று ஆட்சியை அறுவடை செய்தவர்.

எனவே இன்றைய எதிர்க்கட்சிகள் அன்று அவர் ஏற்ற பொறுப்பையும், செய்த கடமையையும் நிறைவேற்ற வேண்டிய நிலையில் உள்ளன என்பதை அரசாங்க தரப்பு முதலில் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. ஜனாதிபதி அண்மையில் அனர்த்த முகாமைத்துவ விஷயங்களை மாவட்ட மட்டத்தில் மேற்கொண்ட எங்கள் எல்லோருக்கும் எவரையும் கேள்வி கேட்கின்ற உரிமை உண்டு என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். ஆனால் பாராளுமன்றத்தில் இடம் பெறும் கேள்வி, பதில்களை கேட்கும் போது அருவருப்பாக இருக்கிறது. சிலர் ஜனாதிபதியின் கருத்துக்கு முரணான கருத்துக்களை வெளியிட்டு அவரைச் சங்கடப்படுத்துகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் பொறுப்பும், கடமையும் என்னும் போது உதவியாக இருந்திருக்கும். இன்று எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளில் பல அனர்த்தத்திற்கு முன்னர் எழுப்பப்பட்டிருக்க வேண்டியவை. எனவே இது விடயமாக அரசாங்கத்திற்கும், எதிர்க்கட்சிகளுக்கும் உள்ள பொறுப்பு கூறல் வகிபாகம் 50:50. தவறுகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கி விட்டு பின்னர் பிழைபிடிப்பது அப்பட்டமான கட்சி அரசியல் நகர்வு.

சாணக்கியன் எம்.பி. பாராளுமன்றத்தில் அனர்த்த உயிர் இழப்புக்களை 'அரசாங்கம் செய்த கொலை' என வர்ணித்தது முழுமையாக ஏற்புடையதல்ல. அவரது முன்னேற்பாடுகள் செய்யப்படவில்லை, பொறுப்புடன் செயற்படவில்லை, எச்சரிக்கைகளை கவனத்தில் கொள்ளவில்லை என்பன போன்ற குற்றச்சாட்டுக்களை விடவும், 'அரசாங்கம் செய்த கொலை' என்ற வார்த்தை மட்டும் அல்ல அவரது தொனியும் கண்டிக்கத்தக்கது. ஒரு கடினமான விடயத்தையும் மென்மையாக எடுத்துச் சொல்ல முடியும். 'இந்த உயரிய சபையில் என்று பேச்சை தொடங்கி பலர் அந்த சபையை தாழ்த்தி தரம் குறைத்து விடுகிறார்கள். இவர்கள் ஆளும், எதிர் இரு தரப்பிலும் உள்ளனர்.

மறுபக்கத்தில் அவகாலச்சட்டத்தை பிரகடனம் செய்யப்படவேண்டும், அனைத்து கட்சிகளுடன் பேச வேண்டும், சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டவேண்டும்.... போன்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் அரசாங்கத்தால் சாதகமாக பார்க்கப்பட்டதுடன், பதிலளிக்கப்பட்டும் உள்ளன. 'நாட்டை கொண்டு நடாத்த முடியாவிட்டால் எங்களிடம் ஒப்படையுங்கள்', 'சர்வதேச நாணயநிதியத்துடன் உங்களுக்கு பேச முடியாவிட்டால் நாங்கள் பேசுகிறோம்' என்ற எதிர்கட்சி தலைவர் சஜீத் பிரேமதாசவின் கோரிக்கைகளுக்கு, ஜனாதிபதி அணே ப்ளீஸ் எபா என்று பதிலளித்துள்ளார்.

இந்த போராட்ட வளர்ச்சி போக்கு குறித்து ஜே.வி.பி.க்கு யாரும் வகுப்பு எடுக்க வேண்டியது இல்லை. ஏனெனில் அது தான் அவர்களின் அரசியல் வீதி வரைபடம். வேண்டுமானால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் எவ்வாறு நடந்து கொண்டீர்கள்? அதைத் தான் நாங்களும் செய்கிறோம் என்று எதிர்க்கட்சிகள் நினைவுபடுத்தலாம்.

ஒரு ஜனநாயக நாட்டில் -பாராளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் தங்கள் கடமைகளை செய்யமுடியாமல் போனதன் இறுதி விளைவே காலிமுகத்திடல் 'அரகலய' என்பதையும், அரச தலைவர் கோத்தாபாய நாட்டை விட்டு ஓடிய பின்னரும், பாராளுமன்ற பெரும்பான்மையூடான அதிகார துஷ்பிரயோகத்தை தடுக்க பாராளுமன்றத்தை கொளுத்த ஜே.வி.பி.விடுத்த அறைகூவலையும், யார் மறந்து இருந்தாலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மறக்க வாய்ப்பில்லை.

கடந்த அரசாங்க காலத்தில் ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மேற்கூறிய ஐந்து பொறுப்புக்களையும், கடமைகளையும் சுதந்திரமாக செய்ய முடியாத நிலையில் மக்கள் போராட்டமாக அது வெடித்தது. இன்றைய ஜனாதிபதி அன்று பாராளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி மேற் கொள்ளப்பட்ட ஜனநாயக மறுப்புக்களுக்கு எதிராக கடுமையாக குரல் கொடுத்த ஒருவர். பொருளாதார நெருக்கடிக்கு ஊழல், இலஞ்சம், தரகுப்பணம், மற்றும் குடும்ப, அரசாங்கத்தின் அனைத்து அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளையும் நிராகரிக்கவேண்டும் என்பதோ அல்லது அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் நியாயமான விமர்சனங்கள், ஆலோசனைகள், கோரிக்கைகளை பெரும்பான்மையை பயன்படுத்தி புறந்தள்ள வேண்டும் என்பதோ அல்ல. பேரிடர் காலம் ஒன்றில், அனர்த்த முகாமைத்துவம் குறித்து மாறுபட்ட கருத்துக்களுக்கு மத்தியில் கட்சி அரசியல் செய்யாது ஒன்றிணைந்து செயற்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கும், நிவாரண, மீள் கட்டமைப்பு நிதி உதவிகளை செய்ய முன்வந்துள்ள சர்வதேசத்திற்கும் பெரும் நம்பிக்கையை அளிப்பதாக இருக்கும். ஊர் இரண்டு பட்டால் நன்மையடைவது யார்? என்பது அரசாங்க, எதிர்கட்சி தரப்புக்களுக்கு தெரியாத பூகோள அரசியல் அல்ல.

அண்மைய இயற்கை அனர்த்தம் தொடர்பாக எதிர்கட்சிகளால் முன் வைக்கப்பட்ட முக்கிய குற்றச்சாட்டு தேசிய, பிராந்திய, சர்வதேச காலநிலை அறிக்கைகளை கணக்கில் எடுத்து முன் ஏற்பாடுகளை செய்யவில்லை என்பதாகும். அதேவேளை இந்த அறிக்கைகளை இன்று பாராளுமன்றத்தில் பட்டியலிடும் எதிர்கட்சிகள், இந்த அறிக்கைகளை முன் வைத்து அனர்த்தத்திற்கு முன்னர் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முற்காப்பு நடவடிக்கைகள், முன்னேற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்பவில்லை. அப்படி நடந்திருந்தால் அதற்கு பதிலளிக்கவும், சில ஏற்பாடுகளை செய்யவும் அரசாங்கத்திற்கு

கோத்தபாயவின் பொருளாதார நெருக்கடி காலம் போன்று ஆட்சி இயந்திரம் கொழும்பில் செயலிழக்கவில்லை. நிச்சயமற்ற அரசியல் எதிர்காலத்தை கொண்ட தள்ளாடும் — தொங்கு அரசாங்கமாகவும் இந்த அரசாங்கம் இல்லை. அப்படியான நிலையில் எந்த அரசாங்கமும் அதற்கான பொறுப்பை எதிர்கட்சி தலைவரிடம் ஒப்படைக்கப் போவதில்லை. மேலும் ஜனாதிபதி கூறியது போன்று அது ஐ.எம்.எப்.க்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம். அதை சட்டரீதியான அதிகாரத்தை கொண்டுள்ள இரு தரப்புமே கையாள வேண்டும். வேண்டுமானால் சஜீத் பிரேமதாச இரு தரப்பும் சேர்ந்து இந்த தேசிய நெருக்கடி குறித்து ஐ.எம்.எப்.உடன் பேசுவோம் என்று கோரியிருந்தால் அதன் செயற்றிறன் வேறாக இருந்திருக்கலாம். அரசாங்கத்தின் பதிலும் சாதகமாக இருந்திருக்க வாய்ப்புண்டு.

உதய கம்பன்வலவின் 16அம்ச குற்றப்பத்திரிகை, அதற்கு 5 ஆண்டுகள் சிறை, ரணில் விக்கிரமசிங்க தரப்பின் அரசியல் அமைப்பு சட்ட மீறல்..... இவை எல்லாம் நீதிமன்ற விவகாரங்கள். ஜனாதிபதிக்கு எதிராக பதவிக்காலத்தில் வழக்கு தாக்கல் செய்ய (17ம் பக்கம் பார்க்க)

# ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட அனுபவங்கள்!

(18ம் பக்கத் தொடர்ச்சி) ஏற்பாட்டாளர்கள் அதிர்ச்சியடைந்தனர். பெரும்பாலான துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள், சுலோகங்கள் இலங்கை ஆயுத படைகளுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையிலான போரின் போது ஜே.வி.பி.யின் நடத்தைகளை கண்டனம் செய்பவையாக இருந்தன. ஆயுதப்படைகளுக்கு உதவியதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை சீர்குலைத்ததாகவும் ஜே.வி.பி. மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

### எதிர்பார்த்திராத ஆர்ப்பாட்டம்

அல்பேர்ட்டன் பாடசாலை வளாகத்தில் கடமையில் இருந்த பொலிசார் எதிர் பார்த்திராத ஆர்ப்பாட்டத்தைக் கண்டவுடன் வன்முறை மூளக்கூடும் என்று சந்தேகித்து உடனடியாக தங்களது உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பொலிசாரின் எண்ணிக்கையை அதிகரித்தனர். ரில்வின் சில்வா பயணம் செய்த மேர்சிடெஸ் பென்ஸ் கார் பாடசாலை வாயிலில் பிவேசித்த போது அதை வழிமறித்து பல இளைஞர்கள் இலங்கை அரசாங்கம், பயங்கரவாத அரசாங்கம், நிறுத்து நிறுத்து இனப்படுகொலையை என்று சத்தமிட்டனர். சிலர் காரை பின்னுக்குத் தள்ளுவதற்கு முயன்றனர்.

உடனடியாக செயலில் இறங்கிய மெட்ரோ போலிட்டன் பொலிசார் குழப்பக்காரர்களை தள்ளி வெளியில் அனுப்பினர். வாகனத்தை மறித்து நின்றவர்களுடன் இணைந்து கொள்வதற்கு முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்களையும் பொலிசார் தடுத்தனர். சிறிய எண்ணிக்கையான ஆர்ப்பாட்டக்காரர்கள் ரில்வின் சில்வாவின் வாகனத்தை மறிப்பதற்கு முயற்சித்த போதிலும், பெரும்பான்மையான ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்திய வண்ணம் சுலோகங்களை எழுப்பிக்கொண்டு நடைபாதையில் தங்களது போராட்டத்தை நடத்தினர்.

லண்டன் பொலிஸ் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் காரணமாக ரில்வின் சில்வாவின் வாகனம் அதற்கு துணையாக வந்த வாகனங்களுடன் சேர்ந்து ஆர்ப்பாடடத்தைக் கடந்து செல்லக் கூடியதாக இருந்தது. பதற்றமடைந்தவராக தனது காரில் இருந்து இறங்கிய ரில்வினை ஆரவாரம் செய்து வரவேற்ற ஜே.வி.பி. ஆதரவாளர்கள் பகிடி விட்டு அந்த சம்பவத்தை அலட்சியம் செய்தனர். பிறகு ரில்வின் உள்ளே சென்ற போது மண்டபத்தில் கூடியிருந்தோரினால் வரவேற்கப்பட்டார். சில நிமிடங்களுக்குள்ளாகவே ரில்வின தனது வழமையான இனிய சுபாவத்துக்கு திரும்பி விட்டார்.

### நினைவேந்தல் நிகழ்வு

நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்காக நடைபெற்றது. அதை ஒரு இளைஞன் சிங்களத்திலும் சிறுமி ஒருத்தி தமிழிலும் தொகுத்து வழங்கினர். சிங்களத்திலும் தமிழிலும் உரைகளும் பாடல்களும் இடம் பெற்றன. போரில் கொல்லப்பட்ட சகலரையும் நினைவு கூரும் வகையில் எழுதப்பட்ட தமிழ்க்கவிதை ஒன்றை தமிழ் இளைஞர் ஒருவர் வாசித்தார். நிகழ்வில் உரையாற்றிய சிங்களப் பெண்மணி ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் தனது அனுபவங்களை விபரித்தார்.

நிகழ்வில் மிகவும் சிறப்பான அம்சமாக ரில்வின் தோழரின் உரையே அமைந்தது சுமார் ஒரு மணி நேரம் அவர் பேசினார். அவர் தனது உரையில் ஜே.வி.பி.யினதும் அதன் தாபகத் தலைவர் றோஹண விஜேவீரவினதும் வரலாற்றை சுருக்கமாக நினைவு மீட்டினார். ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாச ஆகியோரின் கீழான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட கைதுகள், சித்திரவதைகள் மற்றும் படுகொலைகளில் ஆயிரக்கணக்கான ஜே.வி.பி. போராளிகளும் ஆதரவாளர்களும் கொல்லப்பட்ட 1987 – 1989 காலப் பகுதியின் இருண்ட நாட்கள் பற்றியும் ரில்வின் பேசினார். ஜே.வி.பி.யின் குறிப்பிடத்தக்க அரசியல் மறுமலர்ச்சி குறிப்பிட்ட அவர் 2024 தேர்தல்களில் கட்சி அதிகாரத்துக்கு வந்த கதையையும் கூறினார். அரசாங்கம் செய்ய முயற்சிக்கின்ற காரியங்களையும் அவை தொடர்பில் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளையும் பற்றியும் அவர் பேசினார். நிகழ்வில் கலந்து கொண்ட ஐவருடன் தொடர்பு கொண்டு நான் பேசினேன். அவர்கள் அனைவரும் ரில்வினின் உரையை பாராட்டினர்.




அல்பேர்ட்டன் உயர் பாடசாலைக்கு வெளியே இடம் பெற்றதைப் போன்ற ஆர்ப்பாட்டங்களுக்கு பிறகு தமிழ் வாய்ச்சொல் வீரர்கள் சமூக ஊடகங்களில் பெருமையடித்துக் கொள்வது கடந்த காலத்தில் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆர்ப்பாட்டங்கள் மாபெரும் வெற்றியாக அமைந்ததாக காணப்பிக்கப்படுவதும் ஆர்ப்பாட்டங்களின் இலக்காக இருந்தவர்களை இழிவுபடுத்தித் தாக்குதல் தொடுப்பதும் வழமையாகும். அத்தகைய ஆர்ப்பாட்டங்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பொதுவில் வழமையாக இருந்து விடுவர். ஆனால், இந்த தடவை அந்த கடந்த கால போக்கில் ஒரு மாறுதலைக் காணக் கூடியதாக இருந்தது.

### ஆர்ப்பாட்டம் மீது கண்டனம்

ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து பல தமிழர்கள் சமூக ஊடகங்களில் பதிவுகளைச் செய்தார்கள். இவ்வாறு கண்டனம் செய்தவர்களில் பலர் இலங்கையில் இருப்பவர்களாக தெரிகிறது. இலங்கையில் வெளியாகின்ற சில தமிழ்ப்பத்திரிகைகளும் கூட கண்டனத்துக்கு இலக்காகின. ஆர்ப்பாட்டம் மீதான இந்த கண்டனக்கள் இரு அடிப்படையான அம்சங்களைக் கொண்டவையாக இருந்தன.

முதலாவதாக ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் தான் ஒரு வருடத்தை நிறைவு செய்திருக்கிறது. தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் சிலவற்றை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்ற போதிலும், அது தமிழர்களுக்கு எதிரான எந்தவொரு பெரியளவிலான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அதனால் அரசாங்கத்துக்கு மேலும் கால அவகாசத்தைக் கொடுக்க வேண்டும். அத்துடன் ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இந்த சந்தர்ப்பத்தில் காலப் பொருத்தமற்றதும் அநாவசியமானதுமாகும்.

இரண்டாவதாக புலம்பெயர் தமிழர்களின் இத்தகைய ஆர்ப்பாட்டம் அர்த்தமற்றதாகும். பகைமையான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை எதுவும் இருக்கவில்லை. வெம்பிளி ஆர்ப்பாட்டத்தைப் போன்ற புலம்பெயர் தமிழர்களின் கோணங்கித்தனமான நடவடிக்கைகள் பொதுவில் இலங்கையிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்களுக்கு எந்த பயனையும் தரப்போவதில்லை, உதவப் போவதுமில்லை. மேலும், பிரதான தமிழ் அரசியல் கட்சியான இலங்கை தமிழரசு கட்சி ஜனாதிபதி திசநாயக்கவை சந்திப்பதற்கு நேரம் கேட்டு அதைப் பெற்றுமிருந்தது. தமிழரசு கட்சியுடனான பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி புதிய அரசியலமைப்பு ஒன்று தொடர்பில் கலந்தாலோசனைகளை தொடங்கப் போவதாக உறுதியளித்திருந்தார். மாகாண சபை தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என்றும் அவர் உத்தரவாதம் வழங்கினார்.

ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மீதான தமிழர்களின் பெருமளவு கண்டனங்கள் வழமைக்கு மாறானவையாகும். இந்த கண்டனங்களுக்கு எதிரான பிரதிபலிப்புகளையும் காணக் கூடியதாக இருந்தது. துரோகிகள், அரசாங்கத்தின் கைக்கூலிகள், றோவின் ( இந்திய புலனாய்வுப் பிரிவு ) முகவர்கள் என்ற வழமையான பட்டஞ் சூ ட்டல்களும் இடம்பெற்றன. ஆனால் அவை பொருட்படுத்தக் கூடியவையாக இருக்கவில்லை. அறிவியல 'பூர்வமான எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் மேலோட்டமாக நோக்கும் போது ஆர்ப்பாட்டத்தைக் கண்டனம் செய்த தமிழ்ச் சமூக ஊடகப்பதிவுகளே அதை ஆதரித்த பதிவுகளை விடவும் அதிகமானவையாக இருந்தன.

### விமல் வீரவன்ச

ஜே.வி.பி.யின் முன்னாள் முக்கியஸ்தரும் தற்போதைய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச தனது பழைய தோழர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்த முயற்சித்தார். ஆர்ப்பாட்டம் ஜே.வி.பி.யினால் திட்டமிடப்பட்ட நாடகமாக இருக்கக்கூடும் என்று அவர் கூறினார். வீரவன்சவின் வக்கிரத்தனமான தர்க்கம் ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒரு ஏமாற்று நடவடிக்கை என்று மறைமுகமாக குறிப்பிடுவதாக அமைந்தது. விடுதலை புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஜே.வி.பி. அரசாங்கத்துக்கு எதிரானதாக இருக்கின்ற அதே வேளை, அரசாங்கம் உண்மையில் அந்த சமூகத்தின் ஆணைகளின் பிரகாரம் செயற்படுகிறது என்ற ஒரு எண்ணத்தை உருவாக்குவதையே வீரவன்சவின் கருத்து நோக்கமாக கொண்டிருந்தது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள விடுதலை புலிகளுக்கு ஆதரவான சக்திகள் வீரவன்சவின் குற்றச்சாட்டில் இருந்து ஒரு சாடைக்குறிப்பை எடுத்துக் கொண்டு ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஜே.வி.பி.க்கு எதிரான அரசியல் கட்சிகளின் சிங்கள ஆதரவாளர்களினால் நடத்தப்பட்டது என்று கதையைப் பரப்பின. சில சிங்களவர்கள் ஆர்ப்பாட்டத்துக்கு நிதியுதவி செய்ததாகவும் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் போன்று பாசாங்கு செய்து கொண்டு சில தமிழர்களும் சிக்களவர்களும் கூலிப் படைகளாகச் செயற்பட்டதாகவும் கூறப்பட்டது.

### இரண்டு லிங்கங்கள்

இதில் அறவே உண்மையில்லை. லண்டனில் உள்ள விடயமறிந்த சில வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு நான் வினவினேன். எனக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் நியூயோர்க் கில் இருந்து இயங்கும் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தலைமையிலான நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துடன் முன்னர் சம்பந்தப்பட்டிருந்த இருவரினாலேயே ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்துக்கு ஆர்ப்பாட்டத்தில் எந்த சம்பந்தமும் இல்லை.' லிங்கம்' என்று முடிவடையும் பெயர்களைக் கொண்ட இருவரே ஆர்ப்பாட்டத்தின் பிரதான ஏற்பாட்டாளர்கள்.

ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெருமளவானோர் இரு பரந்த வகைகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். தமிழர் ஒருங்கிணைப்புக்குழு என்று அறியப்படும் அமைப்புடன் தொடர்புடைய இளைஞர்களை உள்ளடக்கியது ஒரு வகை. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் தொடர்புடைய ஆர்ப்பாட்டக்காரர்களில் பலர் ஐரோப்பா கண்டத்தில் இருந்து வந்தவர்கள் பொதுவில் அந்த இளைஞர்கள் மேற்குலகில் பிறந்தவர்களாக அல்லது குழந்தைகளாக மேற்குலகிற்கு வந்து ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்தவர்கள். இரண்டாவது வகையினர் ஐக்கிய இராச்சியத்தில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்து விட்டு இருப்பவர்களை உள்ளடக்கியது. அவர்களது அகதி (23ம் பக்கம் பார்க்க)

# கூட்டணி அரசியலை மையமாகக் கொண்ட தமிழ்நாட்டுத் தேர்தல்கள்!

2026 தமிழ்நாடு சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் கூட்டணிகளை அமைப்பதற்கு அரசியல் கட்சிகள் நெருக்கியடித்துக் கொண்டு போட்டி போடுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும் சமூகநீதி, பிராந்திய சுயாட்சி மற்றும் தமிழ்ப்பெருமை ஆகியவற்றில் வேரூன்றிய திராவிட கோட்பாடுகள் பற்றி பேசுகின்ற அதேவேளை, அவற்றின் கடந்த காலச் செயற்பாடுகள் அவை தங்களது பங்காளிக் கட்சிகளில் எந்தளவுக்கு தங்கியிருந்தன என்பதைக் காட்டுகிறது.

2026 தேர்தல் களம் நான்கு முனைப் போட்டியாக அமையக்கூடிய சாத்தியம் இருக்கிறது. மிகப்பெரிய முனையாக தி.மு.க. தலைமையிலான கூட்டணி இருக்கப் போகிறது. 2021 ஆம் ஆண்டில் பெரிய கூட்டணியின் வெற்றிக்குப் பிறகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. இரண்டாவது தடவையாகவும் பதவிக்கு வரும் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கிறது. தேசிய முற்போக்கு திராவிட கழகமும் பிளவுபட்டிருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியும் அவற்றின் கூட்டணிகள் குறித்து இன்னமும் அறிவிக்கவில்லை.

அண்ணா தி.மு.க.வின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இவ்விரு கட்சிகளையும் தனது பக்கம் இழுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக வெற்றிக் கழகத்துடன் அண்ணா தி.மு.க. கூட்டணி சேருவதற்கான வாய்ப்பு இல்லாத நிலையில், நடிகர் விஜய் தலைமையிலான அந்த புதிய கட்சி ஒரு சில சிறிய பங்காளி கட்சிகளுடன் கூட்டணியை அமைக்கக் கூடும். பலம் பொருந்திய கூட்டணிகள் கடந்த காலத்தில் வெற்றியைக் கொண்டு வந்திருக்கின்றன. அவை எப்போதுமே வெற்றியைக் கொண்டு வரும்' என்று தி.மு.க. பேச்சாளரான ரி.கே.எஸ். இளங்கோவன் கூறுகிறார்.

1967ஆம் ஆண்டில் தி.மு.க. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. சி.என். அண்ணாத்துரையின் வழிகாட்டலில் தி.மு.க. தலைமையிலான ஒரு கூட்டணி முதல் தடவையாக முக்கியமான அரசியல் சக்தியாக வெளிக் கிளம்பியது. ஐந்து தேசியக் கட்சிகள் அந்த கூட்டணியை ஆதரித்தன. அண்ணாவின் ஆசான் ஈ.வெ. இராமசாமி பெரியாரின் திராவிடர் கழகமும் எம். பக்தவத்சலம் தலைமையிலான இந்திய தேசிய காங்கிரஸுக்கு ஆதரவளித்தது. தமிழ் திரையுலகத்துடனான தி.மு.க.வின் நீண்டகால உறவு காங்கிரஸின் கொள்கைகளுக்கு எதிராக தீவிரமான பிரசாரங்களை முன்னெடுத்து அதன் சொந்த அரசியல் கோட்பாடுகளைப் பிரபல்யப்படுத்தப் பெரிதும் உதவியது.

தேர்தல் நடப்பதற்கு சில வாரங்கள் முன்னதாக ஒரு கொலை முயற்சி தமிழ்நாட்டை உலக்கியது. எம்.ஜி. ஆரை அவரது சென்னையில் உள்ள வீட்டில் வைத்து நடிகர் எம்.ஆர். ராதா துப்பாக்கியில் சுட்டார். அவரது ரசிகர்கள் பெரும் கலவரத்தில் இறங்கினர். தி.மு.க. தலைமையிலான கூட்டணி சட்டசபையின் 234 ஆசனங்களில் 179 ஆசனங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸுக்கு 51 ஆசனங்கள் கிடைத்தன. எம்.ஜி.ஆர் மீதான துப்பாக்கி வேட்டா அல்லது கூட்டணியின் பலமா தி.மு.க.வின் வெற்றிக்கு உதவியது? இதுவரை உண்மை தெரியவில்லை.




1967 ஆம் ஆண்டில் முற்றிலும் வேறுபட்ட வகையான கூட்டணி அரசியல் ஒன்றை முயற்சித்துப் பார்ப்பதே அண்ணாவின் தந்திரோபாயமாக இருந்தது. அவர் அதை தேர்தல் உடன்பாடு என்று அழைத்தார்' என்று கூறுகிறார் திராவிடர் கழகத் தலைவர் கே. வீரமணி. தி.மு.க. தலைமையிலான கூட்டணியின் பொது எதிரியாக அன்று காங்கிரஸ் விளங்கியது. கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் முஸ்லிம் லீக் உட்பட பல கட்சிகள் அந்த கூட்டணியில் அங்கம் வகித்தன. காங்கிரஸைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரேயொரு இலக்கு சகலரையும் ஐக்கியப்படுத்தியது. தி.மு.க. கூட்டணியின் அடிப்படையாக ஒரு கோட்பாடு தான் இருந்தது. அது தொடருகிறது' என்று வீரமணி கூறுகிறார்.

1971 ஆம் ஆண்டில் தி.மு.க. இந்திய தேசிய காங்காரஸ் (இந்திரா) உட்பட ஏழு கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஒன்றை அமைத்தது. தி.மு.க.வுடனான உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடவில்லை. சட்டசபையில் 205 ஆசனங்களைக் கைப்பற்றி கூட்டணி பிரமாண்டமான வெற்றியைப் பெற்றது. 197 சடடசபை தேர்தலில் எம்.ஜி.ஆரின் அண்ணா தி.மு.க. முதற்தடவையாக நான்கு கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஒன்றை அமைத்து 144 ஆசனங்களைக் கைப்பற்றியது. தனியாகப் போட்டியிட்ட தி.மு.க.வுக்கு 48 ஆசனங்கள் மாத்திரமே கிடைத்தன.

1980 சடடசபை தேர்தலில் அண்ணா தி.மு.க. தலைமையிலான ஐந்து கட்சிகளைக் கொண்ட கூட்டணி 162 ஆசனங்களைக் கைப்பற்றிய அதே வேளை காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணி.69 ஆசனங்களில் வெற்றி பெற்றது.

1984 தேர்தலில் அண்ணா தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி 195 ஆசனங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க. கூட்டணிக்கு வெறுமனே 34 ஆசனங்களே கிடைத்தன. 1989 ஆம் ஆண்டில் மூன்று கட்சிகளைக் கொண்ட தி.மு.க. கூட்டணி (ஜெயலலிதா அணியாகவும் ஜானகி இராமச்சந்திரன் அணியாகவும் பிளவுபட்டு நின்ற அண்ணா தி.மு.கவை தோற்கடித்து) அதிகாரத்துக்கு வந்தது.

1991 ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி கொலையை அடுத்து ஏற்பட்ட அனுதாப அலையில் அண்ணா தி.மு.க.வும் காங்கிரஸும் மகத்தான வெற்றயைப் பெற்றன. ஜெயலலிதாவுக்கு அது முதலாவது முக்கியமான வெற்றி. 1996ஆம் ஆண்டில் ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தேர்தல் பிரசாரங்களை ஆக்கிரமித்த காரணத்தினால் அலை மறுபக்கமாக திரும்பியது. ஜி.கே. மூப்பனார் தலைமையிலான தமிழ்நாடு மாநில காங்கிரஸுடன் கூட்டுச்சேர்ந்து தி.மு. க. வெற்றிபெற்றது.

2001ஆம் ஆண்டில் ஒன்பது கட்சிகளைக் கொண்ட அண்ணா தி.மு.க. கூட்டணி தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணியை தோற்கடித்தது. ஐந்து வருடங்களுக்கு பிறகு காங்கிரஸை தனது பக்கத்தில் வைத்துக் கொண்டு தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தது. 2011 ஆம் ஆண்டில் நடிகர் விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம் உட்பட 11 கட்சிகளைக் கொண்ட கூட்டணியை அமைத்து அண்ணா தி.மு.க.வெற்றி பெற்றது. 2016 ஆம் ஆண்டிலும் அண்ணா தி.மு.க.வே வெற்றி பெற்றது.

ஆனால், அந்த வருடம் அமைக்கும் தந்திரோபாயத்தை கை விட்டு அண்ணா தி.மு.க. 234 தொகுதிகளிலும் தனியாக போட்டியிட்டது. அதற்கு 136 ஆசனங்கள் கிடைத்தன. எம்.ஜி.ஆருக்கு பிறகு அந்த கட்சி அடுத்தடுத்து இரு தடவைகள் ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பமாக அது அமைந்தது.

2 ஜி ஊழலும் தி.மு.க.வுக்கும் காங்கிரஸுக்கும் இடையில் ஒழுங்கான ஒருங்கிணைப்பு இல்லாதமையும் அவர்களின் தோல்விக்கு காரணம் என்று கூறப்பட்டது. வைகோவின் மறுமலர்ச்சி தி.மு.க., தேசிய முற்போக்கு திராவிட கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய மக்கள் நலக் கூட்டணி என்ற மூன்றாவது அணியொன்றும் அந்த தேர்தலில் போட்டியிட்டது.

அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையில் இருக்கக்கூடிய புரிந்துணர்வும் நெருக்கமான உறவு முறையுமே கூட்டணி ஒன்றை பலம் பொருந்தியதாக வைத்திருக்கும் என்று தி மு.க. பேச்சாளர் மனு சண்முகசுந்தரம் கூறுகிறார்.

இந்தியா கூட்டணி (INDIA bloc) 2017 ஆம் ஆண்டில் இருந்து பல மாநிலங்களின் சட்டசபை தேர்தல்களில் வெற்றி பெற்றது. கட்சிகளுக்கு இடையில் பொதுவான கோட்பாட்டு பிணைப்பு இருப்பதனால் அவற்றின் தொண்டர்கள் மத்தியில் ஒத்துழைப்பு இருக்கிறது. எதிர்க்கட்சிகளின் கூட்டணி தோழமையினால் அல்ல, நிர்ப்பந்தத்தினால் உருவாக்கப்பட்டது. தோற்கடிக்க முடியாத கூட்டணிக் கணிதமே தற்போதைய தி.மு.க. அரசாங்கத்தின் மிகப்பெரிய பலங்களில் ஒன்றாக விளங்குகிறது என்று சண்முகசுந்தரம் கூறினார்.


களத்தில் தீவிரமான பிரசாரங்களை முன்னெடுக்கக்கூடிய வல்லமையையும் சாதிப்பலம் மற்றும் நிதிவசதிகளை கூட்டணிகள் கொண்டு வருகின்றன. ஆனால், 2026 தேர்தலில் கூட்டணிக் கணிதம் மாத்திரம் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு போதுமானதா? தமிழக வெற்றிக்கழகம் பாரதூரமான சவாலாக வெளிக்கிளம்பக்கூடும் என்று விஜயைச் சார்ந்தோர் கூறுகிறார்கள்.

பலம்பொருந்திய கூட்டணிகள் வெற்றிக்கான விதிமுறையாக அமைவதாக இருந்தால், 2016ஆம் ஆண்டில் அண்ணா தி.மு க. தனியாகப் போட்டியிட்டு எவ்வாறு வெற்றி பெற்றது?' என்று பாரதிய ஜனதாவின் பிரதான பேச்சாளரான நாராயணன் திருப்பதி கேள்வி எழுப்புகிறார்.


தேசிய ஜனநாயக கூட்டணியுடன் விஜய் சேர்ந்து கொள்வாராக இருந்தால் அது பாரிய வெற்றியைப் பெறும் என்று அவர் கூறுகிறார். மூத்த தலைவரான கே.ஏ. செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து விட்டதால் விஜயுடன் தாங்கள் கூட்டணி சேருவதற்கான வாய்ப்பை அவராகவே மூடிவிட்டதாக அண்ணா தி.மு.க. தலைவர்கள் கூறுகிறார்கள். செங்கோட்டையனை தொடர்ந்து டி.டி.வி. தினகரனும் ஓ. பன்னீர்ச்செல்வமும் விஜயுடன் சேர்ந்து விடக் கூடிய சாத்தியம் இருக்கிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

அண்ணா தி.மு க.வுடனான கூட்டணி (17ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும். உத்தியோகத்தில் செயல்திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பெண்கள் எந்த விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள்.





ரிஷபராசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீண் வாக்குவாதங்கள் அகலும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை நீங்கும்.





மிதுனராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும் போதும் கவனமாக இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும்.




கடகராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பாக துணிச்சலாக எடுக்கும் முடிவுகள் வெற்றியை தரும்.





சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமாக தங்களது பணிகளை கவனிப்பது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். எதை விரும்பினாலும் அது கிடைக்க வழி தெரியும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். பணியாளர்கள் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உத்யோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்க பெறுவர்.





துலாம்ராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி பெறும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். வேலை தொடர்பான வீண் அலைச்சல் உண்டாகலாம். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து வந்த பூசல்கள் அகலும். பெண்கள் எதை பற்றியும் அதிகம் யோசித்து மனதை குழப்பி கொள்ளாமல் இருப்பது நன்மை.





விருச்சிகராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்னை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். ஆனாலும் அதன் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.








தனுசுராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் அடையும். அதே வேளையில் சுபச்செலவுகள் அதிகமாகும். எந்த விஷயத்திலும் மிகவும் நிதானமாக இருப்பது நல்லது. அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதோ அல்லது அதைப் பற்றி விவாதிப்பதையோ தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம் கவனம் தேவை. வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். முயற்சிகளில் உடனடியாக பலன் காண்பது அரிது. எந்த ஒரு வேலைக்கும் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. சகோதரர்கள் வழியில் ஏதேனும் பிரச்சனை வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும்.




மீனராசி அன்பர்களே! செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதூர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். பெண்கள் சாதூர்யமாக பேசி எல்லா காரியத்தையும் வெற்றிகரமாக செய்து முடிப்பர். இவ்வாரம் சிறப்பானதாகும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மாவீரர் நாள் - புயல் - கொலை

(15ம் பக்கத் தொடர்ச்சி) சக்தியற்றவர்களாக, அதைத் தடுக்கும் துணிச்சலற்றவர்களாக, தங்களைத் தாங்களே தற்காத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு தப்பிச் செல்பவர்களாகத்தான் அவர்கள் காணப்பட்டார்கள். இத்தனைக்கும் ஒரு காலம் தன் வீரத்துக்கும் தியாகத்துக்குமாக உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு மக்கள் கூட்டம். புயல் தணிந்த வேளை நடந்த கொலை அது. அந்தக் கொலையை விடக் கொடுமையானது, அதை கையாலாகாத சாட்சிகளாகப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம்.

அதேசமயம் அதே மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து தான் இன்னொரு தொகுதி இளையவர்கள் தாங்களாக முன்வந்து வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களை நோக்கிப் போனார்கள். ஆபத்தை எதிர்கொண்டு நனைந்து நனைந்து, பாதிக்கப்பட்ட மக்களை,தனித்து விடப்பட்ட மக்களைத் தேடித்தேடி உதவினார்கள்.

இந்த இரண்டுமே ஒரே சமூகத்தில் காணப்படும் ஒன்றுக்கொன்று முரணான காட்சிகள். ஆனால் இதற்குள் தான் இருக்கிறது தமிழ் மக்களின் தற்போதைய அரசியல் யதார்த்தம்.ஒருபுறம் தானும் தன்பாடும் என்று கூட்டுப் புழுக்களாகப் பதுங்க முற்படும் கூட்டு மனோநிலை. இன்னொருபுறம் மழை, வெள்ளம், புயல் என்பவற்றைத் தாண்டி ஆபத்தில் சிக்கியிருக்கும் மக்களைத் தேடிச் செல்லும் இளையோர் கூட்டம்.சரியான பொருத்தமான தலைமைகள் இந்த இளையவர்களை ஒருங்கிணைத்து இலட்சிய வேட்கை கொண்டவர்களாக வார்த்தெடுத்தால், அவர்கள் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் என்பதைத் தான் டித்வா புயலுக்கு பின்னரான மனிதாபிமானச் சூழல் நமக்கு உணர்த்துகின்றது.

# ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட அனுபவங்கள்!

(23ம் பக்கத் தொடர்ச்சி) நாம் தொடர முடியும் என்றும் அவர் கூறினார். எமது பேச்சுவார்த்தை நேர்மறையானதாக இருந்தது. ரில்வின் கூறிய பல விடயங்கள் நம்பிக்கை தருவதாக இருந்தன. ஆனால், அவையெல்லாம் வெறும் வார்த்தைகள் தானா அல்லது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இதுவே புலம்பெயர் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் பிரிவுகளுடனான ரில்வினின் அனுபவங்களாகும். ஒரு பிரிவு கடுமையான பகைமையை வெளிப்படுத்தி பிரசித்தி தேடிக்கொள்கிறது. மற்றைய பிரிவு நெகிழ்ச்சித் தன்மையுடன் அர்த்தமுடைய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தயாராக இருக்கிறது. ஐக்கிய இராச்சியத்தில் ரிர்வின் சில்வாவின் இந்த முரண்பாடான அனுபவங்கள் எதிர்மறையான கடந்த காலப் போக்கைக் கைவிட்டு சகல சமூகங்களுக்கும் பொதுவான எதிர்காலம் ஒன்றை அரவணைப்பதில் ஜே.வி.பி.க்கு இருக்கும் சிக்கல்களை வெளிக்காட்டுகின்றன.

# மனைவி குழந்தைகளை இந்தியாவுக்கு அனுப்புங்கள்! அமெரிக்கத் துணை ஜனாதிபதிக்கு நெட்டிசன்கள் பதிலடி



அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ், 'வெகுஜன குடியேற்றம் என்பது அமெரிக்க கனவைத் திருடுவது என சமூகவலைத்தளத்தில் பதிவிட்டதால் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டில் இருந்து வரும் குடியேற்றக்காரர்கள் அமெரிக்க தொழிலாளர்களிடம் இருந்து வாய்ப்புகளை பறிப்பதாக அவர் வாதிட்டார்.

இந்த கருத்துக்குப் பலரும் அவரது தனிப்பட்ட குடும்ப பின்னணியை சுட்டிக் காட்டி சமூக ஊடகங்களில் கடுமையாக விமர்சித்தனர்.

வேன்ஸ், இந்திய வம்சாவளி மகளும் அமெரிக்காவில் பிறந்தவருமான உஷாவை மணந்துள்ளார். இதனால், 'உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளே அமெரிக்க கனவைத் திருடுகிறார்களா?' என்றும், அவர் தனது குடும்பத்தையும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் பயனர்கள் சினத்தை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை முன்னதாக, அண்டை வீட்டார் தங்கள் இனம் அல்லது தோல் நிறத்தை பகிர்ந்துகொள்பவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவது முற்றிலும் நியாயமானது என்ற தொடர்ச்சியான கருத்துக்கள், குடியரசு கட்சிக்குள் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ் நிலைப்பாட்டை மேலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

எதிர்பாருங்கள்! காத்திருங்கள்! காணத் தவறாதீர்கள்!
ஈழநாடு பத்திரிகையின் 33வது ஆண்டு விழா தமிழ் இயலும் - இசையும்
21 மார்ச் 2026 சனிக்கிழமை தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

(20ம் பக்கத் தொடர்ச்சி) அந்தஸ்துக் கோரிக்கை வலுவானதாக இல்லை. அத்துடன் பிரிட்டனில் தற்போது நிலவுகின்ற குடியேற்றவாசிகளுக்கு எதிரான மனநிலையில் இவர்களின் அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி யனுப்பப்படக் கூடிய சாத்தியமும் இருக்கிறது. அகதிக் கோரிக்கை வழக்குகளைக் கையாளும் பழி பாவத்துக்கு அஞ்சாத சில வழக்கறிஞர்கள் இலங்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடு மாறு இந்த துரதிர்ஷ்டவசமான இளைஞர்களை தூண்டி விடுகிறார்கள். இளைஞர்களின் கோரி க்கைகள் நிராகரிக்கப்பட்டு அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டால் இலங்கை அரசாங்கத்து க்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற காரணத்தினால் ஆபத்தை எதிர்நோக்க வேண்டி வரும் என்று இந்த வழக்கறிஞர்கள் வாதிட முடியும்.

### விடுதலைப்புலிகளின் கொடி

ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற வர்கள் விடுதலை புலிகளின் கொடிகளை வைத்தி ருந்தது இன்னொரு புதிரான அம்சமாகும். விடுதலை புலிகள் இயக்கம் ஐக்கிய இராச்சியத் திலும் சுமார் 25 ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப் பட்டிருக்கிறது ஆனால், விடுதலை புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் தொடர்ந்தும் அவற் றின் நிகழ்வுகளிலும் ஆர்ப்பாட்டங்களிலும் புலி களின் கொடிகளை பயன்படுத்துகிறார்கள். விடுதலை புலிகளின் உண்மையான கொடியில் இருக்கும் இரு துப்பாக்கிகளை அகற்றி விட்டு அதை தமிழீழ தேசியக்கொடி என்று பொய்யாகக் காட்டுகிறார்கள். விடுதலை புலிகள் மாத்திரமே தடை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் தமிழீ ழம் தடை செய்யப்படவில்லை என்றும் கூறுகிறார் கள். இந்த ஏமாற்றின் காரணமாக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் இருக்கும் புலிகளுக்கு ஆதர வான சக்திகள் தண்டனைக்கு ஆளாக வேண்டி வருமே என்ற பயமில்லாமல் அந்த கொடிகளை பறக்க விடுகிறார்கள். ஆனால், ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வைத்திருந்த கொடிகளில் விடுதலை புலிகளின் உண்மையான கொடிகளில் இருக்கும் துப்பாக்கி களை காணக்கூடியதாக இருந்தது.

ரில்வினுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஊடகங்களில் பரந்தளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதன் மூலமாக் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள தமிழர்கள் எதிர்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார் கள் என்ற எண்ணம் உருவாக்கப்பட்டது. ஆனால், உண்மையில் ஐக்கிய இராச்சியத்தில் வாழும் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர் களில் ஒரு சில நூறு பேர் மாத்திரமே ஆர்ப்பாட்ட த்தில் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தை பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் கண்டித்தார்கள் என்பதற்கு போதிய ஊடக முக்கியத்துவம் கொடு க்கப்படவில்லை.

### ரில்வின் சந்தித்த தமிழர் தூதுக்குழு

ஆர்ப்பாட்டத்துக்கு பிறகு இரண்டு நாட்கள் கழித்து நவம்பர் 25 ஆம் திகதி ஜே.வி.பி.யின் செயலாளருக்கும் புலம்பெயர் இலங்கைத் தமிழர் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவுக்கும் இடையில் அமைதியான சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. கணக்காளரும் ஈழப்பதீஸ்வரர் சிவன் கோவிலின் பிரதம தர்மகர்த்தாவுமான இராஜசிங்கம் ஜெயதேவன், லண்டனை தளமாகக்கொண்ட தமிழ் ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி கூட்டுத்தாபன த்தை (TBC Radio) இயக்குபவரான வீரையா ராம்ராஜ், தமிழ் தகவல் மையத்தின் பணிப்பாளரான சார்ள்ஸ் அந்தனிதாஸ் மற்றும் சுயாதீன ஆய்வாள ரான வி. சிவலிங்கம் ஆகியோரே அந்த நான்கு பேருமாவர்.

அந்த தூதுக்குழு ரில்வின் சில்வாவுடன் பயனு றுதியுடைய இரு மணி நேர பேச்சுவார்த்தையை நடத்தியது. பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. ரில்வின் மிகவும் மனந்திறந்து பேசினார். அந்த தூதுக்குழுவில் ஒருவர் ரில் வினை பதினைந்து வருடங்களுக்கு முன்னரும் சந்தித்திருந்தார். அண்மைய சந்திப்புக்கு பிறகு என்னுடன் பேசிய அவர் ரில்வினில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காணக்கூடியதாக இருப்பது உற்சாகம் தருவதாக இருக்கிறது என்று கூறினார்.

பதினைந்து வருடங்களுக்கு முன்னரான அந்த சந்திப்பில் ரில்வின் மிகவும் கடுமையானவராகவும் விட்டுக் கொடுக்காதவர்கவும் இருந்தார். ஆனால் இந்த சந்திப்பில் அவர் மிகவும் மென்மையாகவும் நெகிழ்ச்சித்தன்மையுடன் மற்றவர்களின் கருத்து க்களை கேட்பதற்கு தயாரானவராகவும் இருந்தார்'' என்று அவர் கூறினார். இலங்கையின் இனப் பிளவின் இரு மருங்கிலும் உள்ளவர்கள் மத்தியில் தீவிரவாதப் போக்கு மீண்டும் தோன்றி வருவது, அண்மையில் திருகோணமலையில் புத்தர்சிலை தொடர்பாக மூண்ட சர்ச்சை, தொல்லியல் திணை க்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனத் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்களை கையக்கப்படுத்துவதும் நடத்தைகள், மாகாண சபைகளின் எதிர்காலம் என்று பல்வேறு விடயங்கள் சந்திப்பில் ஆராயப்பட்டன.

முற்போக்கான அம்சங்களுடன் புதிய அரசியலமை ப்பைக் கொண்டு வருவதில் எந்த ஆட்சேபனை யும் இல்லை என்கிற அதேவேளை தற்போது இருக்கின்ற மாகாணசபை ஆட்சிமுறை தொடர்ந் தும் பேணப்பட்டு பலப்படுத்தப்ட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்படுவதற்கு முன்னதாக மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

# ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்பட்ட அனுபவங்கள்!

புதிய அரசியலமைப்புக்கு முன்னதாக அந்த தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் ரில்வினுக்கு முழுமையான இணக்கம் இருக் கிறது. ஆனால், தேர்தல்களுக்கான திடடவடட மான காலவரையறையை கூறுவதில் அவர் நழுவல் தன்மையுடன் நடந்து கொண்டார்.

### பொதுவான எதிர்காலம்

வெளிநாட்டில் வாழும் இலங்கை தமிழர்கள் அமைப்பைச் (Orgabization of Non – resident Tamils of Sri Lanka) தூதுக்குழு ரில்வின் சில்வாவுடனான சந்திப்பு குறித்து திருப்தி தெரி வித்தது. இலங்கை அதன் சமூகங்கள் வேதனை யும் சந்தேகமும் பழைய நினைவுகளும் கொண்ட வெவ்வேறு உலகங்களில் வாழ்வதன் மூலம் முன்னேற்றமடைய முடியாது. வெவ்வேறான கடந்த காலத்தையல்ல, பொதுவான ஒரு எதிர் காலத்தையே நாம் கட்டியெழுப்ப வேண்டும் என்று ரில்வின் கூறியபோது மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சி தங்களுக்கு ஏற்பட்டதாக தூதுக்குழு வின் ஒரு உறுப்பினர் என்னிடம் கூறினார். என்றா லும் ஜாக்கிரதையுடன் கூடிய நம்பிக்கையுடன் மாத்திரமே (22ம் பக்கம் பார்க்க)









# பதவிகளுக்காக எதனையும் தாரைவார்க்கத் தயங்காத அதிகாரிகளினால் பழைய பூங்கா குதறப்படுகிறது!

பதவிகளுக்காக எதனையும் தாரைவார்க்கத் தயங்காத அதிகாரிகளினால் தான் பழைய பூங்கா குதறப்பட்டு கொண்டிருக்கிறது என யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்நகரப் பழைய பூங்கா அதில் உள்ளக விளையாட்டரங்கு அமைப்பது விடயத்தில் மிகப்பலமான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் தற்போது எதிர்ப்பாளர்களில் ஒரு சாரார் நீதிமன்றத்தையும் நாடியுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட செயலராக சிறிதுகாலம் (14 மாதங்கள்) பணியாற்றியவன் என்றவகையில் இந்த பழைய பூங்கா பற்றிய எனது கரிசனையையும் எமது அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் குறுகிய சிந்தனைகளையும் பற்றிப் பகிர்ந்து கொள்ளலாமென எண்ணுகிறேன்.

யாழ்ப்பாணப் பழைய பூங்கா கொண்டிருந்த சிறப்பையும் அதன் தொன்மையையும் பெறுமதியையும் அறிந்து கொள்ளாது, அபிவிருத்தி என்ற போர்வையில் எமது இளைய சமுதாயம் மட்டுமன்றி கற்றறிந்தோர் சமுகம் எனக்கூறிக் கொள்ளும் ஒரு சாரார், பதவிகளுக்காக எதனையும் தாரைவார்க்கத் தயங்காத அதிகாரிகள் போன்றோர் இத்தகைய பதிலீடற்ற பெரும் சம்பத்துக்கள் பறி போவதைப் பற்றி எந்தவித கவலையுமின்றி வாழ்ந்து கொண்டிருப்பது வருத்தமளிக்கின்றது.

ஆட்சிக்கு வரும் அரசுகளும் அவர்களால் நியமிக்கப்படும் ஆளுனர்களும் தமக்குரிய அதிகாரங்களை மக்கள் நலனுக்காகவன்றி அம்மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ளாது அவரவர் தனிப்பட்ட அபிலாசைகளுக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் தான்தோன்றித்தனமாகப் பிரயோகிப்பதும் அதனை எதுவித ஆட்சேபனையுமின்றி அதிகாரிகள் சிரமேற் கொண்டு செயற்படுத்துவதும் நாம் எமது நிருவாக வரலாற்றில் தரிசித்த உண்மைகள்.



2023ஆம் ஆண்டு தை 18இல் மாவட்ட செயலராக பொறுப்பேற்று சில நாட்களில் அப்போது ஆளுனராக இருந்தவர் பழைய பூங்காவின் ஒரு பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன் ஏற்கனவே உள்ள ஆளுனர் அலுவலகத்தோடு சில கட்டுமானங்களையும் உருவாக்கியிருந்தார்.

மேலும் காணியைப் பிரித்து குறுக்காக வேலியிட்டு அது ஆளுனர் அலுவலகத்திற்குரியது என அத்துமீறலும் செய்திருந்தார்.

இந்நிலையில் எனது விடுதியிலிருந்து பார்த்த போது அதிகாலை கனரக இயந்திரங்கள் அந்தக் காணியில் ஏதோ வேலைக்காக வந்திருப்பதைக் கேள்வியுற்றேன். அவை மாநகர சபைக்குரியவை என்பதையும் அறிந்து கொண்டேன்.

உடனடியாக மாநகர ஆணையாளருடன் தொடர்பு கொண்டு இந்தக் காணி அரசாங்க அதிபருக்குரியது என்பது உங்களுக்குத் தெரியும் தானே! ஆயின் எனக்குத் தெரியாமல் எனது அனுமதி பெறாமல் என்ன செய்யப் போகிறீர்கள் என வினவிய போது ஆணையாளர் அது எங்களுடைய வேலைத்திட்டம் இல்லை. ஆளுனரின் உத்தரவுக்கமைய இயந்திரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன எனக் கூறினார்.

உடனே இது அரசாங்க அதிபரின் காணிக்குள் எனது அனுமதியில்லாமல் எவரும் எந்த வேலையும் செய்ய அனுமதியில்லை. என்றுகூறி இயந்திரங்களை வெளியேறப் பணித்தேன். ஆணையாளர் இது பற்றி ஆளுனருக்குத் தெரிவித்ததும் ஆளுனர் என்னுடன் தொடர்பு கொண்டு தான் ஒரு நடைபயிலும் சாலை அமைக்க இருப்பதாகவும் அதைச் செய்யப் போவதாகவும் அதைத் தடுக்க வேண்டாம் எனவும் கூறினார்.

ஆனாலும் பழையபூங்கா அபிவிருத்தி பற்றி தீர்மானிக்க வேண்டியது மாவட்ட செயலரே என்றும் அதன் அபிவிருத்தி பற்றிய முன்மொழிவுகள் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆராய்விலுள்ளது பற்றியும் ஆளுனரோடு விவாதித்தேன்.

அவர் உடனடியாக நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களை காலை எட்டு மணிக்கே என்னிடத்தில் அனுப்பி எனது ஒப்புதலைப் பெற முயன்றார். ஆனாலும் இறுதிவரை நான் அதற்கான ஒப்புதலை வழங்கவுமில்லை குறித்த வேலை நடைபெறவுமில்லை.

27ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெறுமதியான அமைவிடத்தில் வரலாற்றுப்பதிவுகள் பலதையும் கொண்ட இந்தக் காணியை எந்தவித தூரநோக்குமின்றி நினைத்தபடி துண்டாடி வெறும் ஒழுங்கற்ற கட்டிடக்காடாக்கி இன்று அழகிழந்து கிடக்கிறது பழைய பூங்கா!

அரியாலை, செம்மணி, மண்டைதீவு, கோப்பாய் போன்ற நகரைச் சுற்றிய இடங்களுக்கு கொண்டு போயிருக்கக்கூடிய அரச கட்டிடங்கள் கைதடி, மாங்குளம், வ்வுனியா போன்ற பகுதிகளில் அமைக்கப்பட வேண்டிய ஆளுனர் மாளிகை மற்றும் ஆளுனர் அலுவலகங்கள் போன்றவற்றை யாழ். நகரப் பழைய பூங்காவில் காலத்துக்குக் காலம் அமைத்து தங்கள் தான்தோன்றித்தனமான அதிகாரப் பிரயோகத்தின் மூலம் அலங்கோலப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

கண்டி, கொழும்பு, அனுராதபுரம், காலி போன்ற நெருக்கடியான நகரங்களில் கூட நகரப் பூங்காக்கள் தீண்டப்படாமல் அவற்றின் தொன்மையும் சிறப்பும் பேணப்பட்டுக்கொண்டிருக்க யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு பூங்காவான பழைய பூங்கா இவ்வாறு குதறப்படுவதைத் தடுத்தேயாக வேண்டும்.





காணத் தயாராகுங்கள்!
Association of Past Business Owners of Sri Lanka -CANADA
இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா
PRESENTS
13வது ஆண்டில்
வர்த்தக தீபம் 2025
13TH ANNUAL
Winter Get-Together
AWARDS | DINNER | ENTERTAINMENT
தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்
Mega Tuners
K2B
K2B DANCE STUDIOS
மெகா ரியூநெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னணி நடன ஆசிரியர்கள், K2B டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....
DEC 27 2025
SATURDAY
6:00 PM
SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PLACE,
SCARBOROUGH, ON. M1X 1E3
வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
கண்ணுக்கினிய நடனங்கள்
நாவிற்கினிய அறுசுவை உணவுகள்
கண்டு களித்து உண்டு மகிழ்வதோடு தாயகத்தில் வாழ்வாதாரமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.
அன்பளிப்பு
$65
Soma Satchithanandan
President
647.202.3234
Sothy Sella
Secretary
647.409.8966
Kathiravel Karunananthan
Treasurer
416.450.4955
வல்லவர் தொழில் வர்த்தகத்துறை